ISSN 1391-9504

PUBLIC LIBRARY
JAFFNA

Vijey விஜய்

# விஜய்

13.08.2014 - மலர் 11, இதழ் 24



## மாட்டுத் தொழுவங்கள் அழிவு...



## சார்ள்ஸ் டார்வின்

### வாழ்க்கைக் குறிப்பு



## கடலைவிட பூமிக்கடியில் அதிக நீர்!






## தனித்துவமிக்க இடது கை பழக்கமுடையோர்

விலை
ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01) இங்குள்ள ஒவ்வொரு இலக்கமும் எத்தனை தடவைகள் பிரசுரமாகியுள்ளன?

1. மூன்று தடவைகள்
2. இரண்டு தடவைகள்
3. ஒரு தடவை

02) முதல் வரிசையில் உள்ள இலக்கங்களைக் கூட்டினால் வருவது;

1. 18 2. 10 3. 15

03) முதலாம் வரிசையிலுள்ள இலக்கங்களை விட, மூன்றாம் வரிசையிலுள்ள இலக்கங்கள்;

1. பெறுமதி கூடியவை
2. ஒரே பெறுமதியுடையவை
3. பெறுமதி குறைந்தவை

04) இலக்கம் 7 உடன் இலக்கம் 3 இனைக் கூட்டினால் வரும் விடை யாது?

.......................................................
















01) இங்குள்ளவற்றில் கொடியில் காய்ப்பது எது?

1. தக்காளி 2. பாகற்காய் 3. இரண்டும்

02) செடியில் காய்ப்பது எது?

1. தக்காளி
2. பாகற்காய்
3. இரண்டும் இல்லை

03) இரவில் உணவு தேடிச் செல்லும் பறவையும் காகத்தின் கூட்டில் முட்டையிடும் பறவையும் முறையே;

1. ஆந்தை, குயில் 2. குயில், ஆந்தை


04) 'பாலைவனக் கப்பல்' என்று சிறப்பித்துக் கூறப்படுவது எது? உரிய படத்தில் வட்டமிடுக.

.......................................................................................

அருகிலுள்ள பெயர்களை உரிய படத்தின் கீழ் எழுதுக.

rose,
mushroom,
bouquet,
tree,
palm tree,
daisy,
tulip,
leaf,
cactus,
nut,
carnation





இங்குள்ள காட்சிகள் இடம்பெற வேண்டிய ஒழுங்குமுறையை 1, 2, 3, 4 என முறையே இலக்கமிட்டுக் காட்டுக.

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652


# ‘ப்ளேக்’ நோயை ஒழித்த தீ விபத்துச் சம்பவம்..!





**1665** ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில், குறிப்பாக லண்டன் மாநகரில் திடீர் மனித மரணங்கள் அடுத்தடுத்து நிகழத் தொடங்கின. வீடுகளிலும் வீதியோரங்களிலும் கட்டடங்களிலும் என ஆங்காங்கே இறப்புக்கள் சம்பவித்தன. இதற்கான காரணம் யாருக்குமே தெரியவில்லை.வயது வித்தியாசமின்றி ஒவ்வொருவராக மடிந்துபோனார்கள். தொடர்ந்து இது மாதக் கணக்கில் நீடித்தது. 1665 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய இந்த திகிலூட்டும் நிகழ்வு, 1666 ஆம் ஆண்டும் நீடித்தது. மக்களோ பதறிப்போனார்கள். அறிவுபூர்வமாகச் சிலர் சிந்திக்க, வேறு சிலரோ மூடநம்பிக்கைகளில் மூழ்கிப் போயினர்.

இவ்வாறு இறந்தவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, ஒரு லட்சத்தையும் தாண்டிவிட்டது. இது லண்டன் மாநகரின் மொத்த சனத்தொகையில் 15% ஆகும். சில மருத்துவ விஞ்ஞானிகள் இது தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டனர். பின்னர் இது ஏதோ ஓர் உயிரினத்தால் பரவும் நோயாகும் என அந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். ஆனால், அது எந்த உயிரினம் என யாருக்கும் தெரியவில்லை. மக்களுக்கோ ஒரே குழப்பம். இதனால், மேலும் பீதியடைந்த மக்கள், தமது வீட்டிலும் வீதியிலும் இருந்த நாய்கள், பூனைகளைத் துரத்தி அடித்துக் கொன்றனர். எனினும், பூனைகள், நாய்கள் ஒழிந்த பின்னர், குறித்த நோய் முன்பிருந்ததைவிட தீவிரமாகப் பரவுவது அவதானிக்கப்பட்டது.








## ப்ளேக் நோய்

1665 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த அழிவு 1666 ஆம் ஆண்டு ஜூலை, ஓகஸ்ட், செப்டெம்பர் என நீடித்தது. அப்பொழுதுதான் தெரியவந்தது... இது எலிகளால் பரவும் ஒருவித கொடூர நோய் என்று. அந்த நோய்க்கு ‘ப்ளேக்’ (plague) என பெயரிடப்பட்டது. மனிதன் பயன்படுத்தும் உணவு மற்றும் நீர் போன்றவற்றுடன், எலிகளின் எச்சங்கள் கலப்பதால் இது ஏற்படுகிறது என பின்னர் தெரியவந்தது. இந்த நோய் பற்றிக் கண்டுபிடிக்கும்போது, இதன் தாக்கத்தினால் லண்டன் நகரில் லட்சக்கணக்கானோர் இறப்புக்குள்ளாகியிருந்தனர். இந்த உயிர்கொல்லி ப்ளேக் நோய்க்கு ஒரு தீர்வு வராதா? அழிவுகள் இத்துடன் ஓயாதா? என மக்கள் ஏங்கித் தவித்தபோது, எவரும் எதிர்பாராத விதத்தில் ஒரு தீர்வு கிட்டியது.

## தீயினால் வந்த தீர்வு

1666 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி லண்டன் நகரின் ஓர் இடத்தில் சாதாரண தீ விபத்தொன்று நிகழ்ந்தது. இத்தீயானது எதிர்பாராத விதத்தில் அசுர வேகத்தில் பரவி, முழு லண்டன் மாநகரமுமே தீப்பற்றி எரியத் தொடங்கியது. அன்றைய காலகட்டத்தில் தற்காலத்தைப் போன்று முறையான தீயணைப்பு வசதிகள் லண்டன் மாநகரில்கூட இருக்கவில்லை. அத்துடன்,அன்று லண்டன் நகரில் கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களைவிட, மரப் பலகைகளினால் கட்டப்பட்ட கட்டடங்களே பெருமளவில் இருந்தன. இதன் காரணமாக மிகவும் வேகமாகப் பரவிய தீ, நான்கு நாட்களாகத் தொடர்ந்து எரிந்தது.

இதனால், ஏறக்குறைய 70,000 வீடுகள், கட்டடங்கள் எரிந்து சாம்பலாகின. மக்களோ செய்வதறியாது லண்டன் நகரின் மத்தியில் ஓடிக்கொண்டிருக்கும் தேம்ஸ் நதிக்கருகில் தஞ்சமடைந்தனர். 1666 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 5 ஆம் திகதி, தீ ஒருவாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதோடு, அவ்வளவு காலமும் மக்களை வாட்டி வதைத்துக் கொன்று குவித்த ப்ளேக் நோயும் சேர்ந்தே அழிந்தது. இந்த தீ விபத்தால் மக்களில் ஒரு சிலர் உயிர் இழந்தனர். ஆனால், லண்டனை ஆக்கிரமித்து வந்த ப்ளேக் நோய்க்குக் காரணமாக இருந்த எலிகளும் நோய்க்கிருமிகளும் முற்றாக அழிவுக்குள்ளாகின. இதனை அடுத்து லண்டன் மாநகரில் ப்ளேக் நோய்க்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. (-அ)



தமிழ் FM இல்
‘ஆறாம் அறிவு’ நிகழ்ச்சி கேளுங்கள்...
‘விஜய்’ சந்தா பரிசைப் பெறுங்கள்...!



விஜய் Vijey
த தமிழ் fm

தமிழ் FM வானொலியில் திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 3 மணியிலிருந்து 5 மணிவரை ஒலிபரப்பாகும் ‘ஆறாம் அறிவு’ என்ற மாணவர்களுக்குப் பொருத்தமான அறிவுத் தேடல் நிகழ்ச்சியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளித்து, ‘விஜய்’ பத்திரிகை வழங்கும் சந்தா பரிசை வெல்லும் வாய்ப்பினைப் பெறுங்கள்!

தமிழ் FM வன்னி 99.5 FM, யாழ்ப்பாணம் 99.7 FM
நாடு முழுவதும் 107.8 FM
இணையத்தில்: www.tamilfm.lk

PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தெனாலிராமன் கதைகள்

# தங்க மஞ்சள் குருவி

விஜய நகர் விழாக்கோலம் பூண்டிருந்தது! அரச உற்சவம்! அதில் கலந்துகொள்ள அண்டை நாட்டு அரசன் விஜயவர்தனர் வந்திருந்தார். விழா முடிந்த பிறகும் சில தினங்கள் விஜய நகரில் அவர் தங்கினார்.

ஒருநாள் மன்னர் விஜயவர்தனர் விஜய நகர மன்னரிடம் ''அரசே நான் கேள்விப்பட்டது உண்மையா? தங்கள் அவையிலுள்ள தெனாலிராமன் மிகவும் சாதுரிய சாலியாமே! அவரிடம் சொல்லி, எனக்குக் காலையில் தங்கமஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலுமாக உருமாறும் அற்புதக் குருவி ஒன்றைக் கொண்டுவந்து தரச் சொல்லுங்கள்'' என்றார்.

மேலும், ''அது சில சமயம் மூன்று காலாலும், சில சமயம் இரட்டைக் காலாலும் பின்னர் ஏழு இறக்கைகள் கொண்டு வானில் பறக்கவும் வேண்டும்'' என்றார். அரசர் உடனே தெனாலியை அழைத்து, ''விரைவில் அத்தகைய குருவியைக் கொண்டுவா...'' என்று உத்தரவிட்டார்.

அதைக்கேட்ட தெனாலிராமனுக்குத் தலை சுற்றியது. அத்தகைய பறவை பற்றி அவர் ஒருபோதும் கேள்விப்பட்டது கூட இல்லை. எனினும், சிரித்தவாறே, ''சரி... அரசே! நாளைக்கு நான் அத்தகைய பறவையோடு வருகிறேன்'' என்றார்.

மறுநாள் தெனாலி, சபைக்குத் தாமதமாக வந்தார். அவர் நிலைமை மிக மோசமாக இருந்தது. கிழிந்த உடைகள் அதில் புற்களும், முட்களும், மண்ணும் ஒட்டியிருந்தன. கையில் குருவி எதுவும் இல்லாத ஒரு பறவைக் கூண்டு.



அவர் அரசரிடம், ''என்ன சொல்வேன் அரசே! அதிசயமான நிகழ்வு ஒன்று நடந்துவிட்டது. அந்தக் குருவி என் கையில் கிடைத்து விட்டது. நானும் அதைக் கூண்டில் அடைத்துவிட்டேன். அதை இங்கு எடுத்து வரும்போது, அது தனது மாயமான ஏழு இறக்கைகளை விரித்து கூட்டில் இருந்து பறந்து சென்றுவிட்டது. காட்டில் அதைத் துரத்திக்கொண்டு வெகுதூரம் சென்றேன். ஆனால், அது மீண்டும் என் கையில் சிக்கவில்லை'' என்றார்.

எனினும் அது, சற்றுத் தூரத்தில் பறந்து செல்லும்போது என்னிடம் சொல்லிற்று, ''அரசரிடம் போய்ச் சொல்... காலை வேளையிலோ அல்லது இரவிலோ அல்லது நடுப்பகலிலோ, வெளிச்சமோ, இருட்டோ இல்லாதபோது, நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து, மீண்டும் வந்துவிடுகிறேன் என்று கூறியதாக... தெனாலிராமனும் இதை மன்னரிடம் கூறினான்.

அதைக்கேட்டதும் அரசருக்கு மட்டுமல்ல; அண்டை நாட்டு மன்னர் விஜயவர்தனருக்கும் தலை சுற்றியது. அப்படிப்பட்ட பொழுது எங்கு உண்டாகும்? ''காலை ஆகாமல், நடுப்பகல் ஆகாமல், இரவு ஆகாமல் வெளிச்சம், இருட்டு ஆகும் சமயம் எது?'' என்று அனைவரும் வியப்படைந்தனர். அதைக் கேட்டு விஜயவர்தனர், அரசரும் விஜயநகர அரசரும் சிரித்துவிட்டனர். அப்போது விஜயவர்தன மன்னர் சொன்னார். ''தெனாலியின் சாதுரியம் பற்றி இதற்கு முன்பு கேள்விப் பட்டுள்ளேனே தவிர, இப்போது தான் நேரில் பார்த்துள்ளேன்'' என்று புகழ்ந்தார்.

ஒருநாள் இரண்டு பூனைகள் சேர்ந்து ஒரு வீட்டிலிருந்து ஒரு ரொட்டியை எடுத்தன. அந்த ரொட்டியை சாப்பிடுவதற்காக இரண்டாகப் பிரிக்கும்போது ஒரு பூனை, ரொட்டி சரி சமமாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று மற்றப் பூனையுடன் சண்டையிட ஆரம்பித்தது.

இரண்டு பூனைகளும் சண்டை பிடித்துக் களைத்துப் போயின. அதனால், தொடர்ந்து சண்டை பிடிக்காமல், யாரிடமாவது சென்று ரொட்டியை பங்கிடுவோம் என்று தீர்மானித்தன. அதனால், இரண்டு பூனைகளும், ரொட்டியைப் பங்கு பிரிப்பதற்காக ஒரு குரங்கிடம் சென்றன. குரங்கும் ரொட்டியை சமமாகப் பிரிக்க ஒரு தராசை எடுத்து



# சமபங்கு

வந்தது. ரொட்டியை இரண்டாக வெட்டித் தராசின் ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு துண்டை வைத்து நிறுத்துப் பார்த்தது.

தராசின் ஒரு தட்டு கீழே தாழ்ந்தது. அப்பொழுது குரங்கு, அந்தத் தட்டில் இருந்த ரொட்டித் துண்டை எடுத்து ஒரு கடி கடித்துத் தான் சாப்பிட்டுவிட்டு மீதியை தட்டில் போட்டது. இப்பொழுது மற்றத் தட்டுக் கீழே தாழ்ந்தது. அந்தத் தட்டிலிருந்த ரொட்டியை குரங்கு எடுத்துக் கடித்துவிட்டுத் தட்டில் போட்டது. இப்படியே தட்டுகள் மாறி மாறி தாழ்ந்தன. குரங்கும் மாறி, மாறி ரொட்டித் துண்டுகளைக் கடித்துக் கடித்துச் சாப்பிட்டுக்கொண்டே இருந்தது.

இப்படியே ரொட்டி குறைவதைப் பார்த்த பூனைகள், தங்கள் தவறை உணர்ந்து பங்கு பிரிக்க வேண்டாம் நாங்களே பார்த்துக்கொள்கிறோம் என்று மீதமுள்ள ரொட்டியைத் தரும்படி கேட்டன. ஆனால், குரங்கு மீதமுள்ள ரொட்டி, தான் இது வரை செய்த வேலைக்குக் கூலி என்று சொல்லிவிட்டு அதையும் வாயில் போட்டுக்கொண்டது. பூனைகள் வெட்கத்துடனும் வேதனையுடனும் அங்கிருந்து திரும்பிச் சென்றன.

# கழுதையின் தந்திரம்

முன்னொரு காலத்தில் உப்பு வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் ஒவ்வொரு நாளும் ஒரு கழுதையின்மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் சென்று வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்குள் போகவேண்டும்.

ஒருநாள் உப்பு வியாபாரி வழக்கம்போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றைக் கழுதை கடந்தபோது, எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிடவே, அது தடுமாறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டது.



கழுதை தவறி ஆற்றில் விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்துவிட்டது. இதனைப் பார்த்த வியாபாரி கழுதையை மெல்லத் தூக்கிவிட்டான். ஆனால், நீரில் உப்பு மூட்டை நனைந்ததால் அது ஒரு சில நிமிடத்தில் கரைந்து பாதி மூட்டையாகிவிட்டது.

இதனால், கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. 'ஆஹா என்ன ஆச்சரியம்! இப்போது கழுதை முதுகில் சுமையே தெரியவில்லை. கழுதைக்கோ மிகுந்த சந்தோஷம்.

ஆனால், வியாபாரிக்கு பெரிய நஷ்டம். இதனால், அந்த வியாபாரி வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

மறுநாளும் வழக்கம்போல வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்கு கனமாக இருந்தது. கழுதை மெல்ல மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது, திடீரென அதற்கு முதல்நாள் நினைவு வரவே மெல்லத் தடுமாறுவது போல பாவனை செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது. அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்துவிடவே இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாதுபோய் விட்டது.

ஒருநாள் வழக்கம்போல் வியாபாரி கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வியாபாரத்திற்கு



கிளம்பிச் செல்லும் வழியில் கழுதை ஏன் ஆற்றுக்குள் விழுகிறது? என்பதை யோசித்துக்கொண்டே கழுதையின் நடவடிக்கைகளைக் கவனித்தான்.

கழுதை வேண்டுமென்றே ஆற்றுக்குள் விழுவதையும் அவதானித்தான். அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிந்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான். அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூட்டையை ஏற்றவில்லை. மாறாக, பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூட்டையை அதன் முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம்போல ஆற்றுப் பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவதுபோல் தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது. மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. ஐயோ! பாவம் கழுதையின் முதுகில் இருந்த பஞ்சு மூட்டை முன்பைவிட அதிகமாகக் கனத்தது. கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது. தனது ஏமாற்று வேலை எஜமானராகிய வியாபாரிக்குத் தெரிந்துவிட்டதை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடந்துகொள்ள முடிவெடுத்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. கிளை நிறுவனங்கள் சிலவற்றின் கொடிகள்

ஐக்கிய நாடுகள் சபை

சர்வதேச தொலைதொடர்பு அமைப்பு

உணவு மற்றும் விவசாய அமைப்பு

சர்வதேச நாணய நிதியம்

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்

சர்வதேச சிவில் விமான சேவைகள் அதிகாரசபை

சர்வதேச உணவு மற்றும் விவசாய அபிவிருத்தி நிதியம்

சர்வதேச தொழிலாளர் அமைப்பு

சர்வதேச அணு அதிகாரசபை

**இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், சிதைந்துபோன நாடுகளை மீளக் கட்டியெழுப்பவும், உலக நாடுகள் மத்தியில் அமைதியை நிலைநாட்டவும் நேச அணிகளை சேர்ந்த நாடுகள் ஒன்றிணைந்து, ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கின. 'ஐக்கிய நாடுகள் சபை' என்ற பெயர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அவர்களினால் சூட்டப்பட்டதாகும். ஐ.நா. தலைமையகம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் மென்ஹட்டன் பகுதியில் அமைந்துள்ளது.**

இந்த சர்வதேச அமைப்பு உருவாக்கப்பட்டதை அடுத்து, சிறுவர் அபிவிருத்தி, மனித உரிமைகள் பாதுகாப்பு, சுகாதார சேவைகள், ஆராய்ச்சிகள், வறுமை ஒழிப்பு, மீன்பிடி தொழிற்துறை, கல்வி, பெண்கள் விவகாரம், இடர் நிவாரண முகாமைத்துவம்,விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி, கடல் போக்குவரத்து, அகதிகள் நலன்கள், அணுசக்தி என்பன குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் சபையின் கிளை நிறுவனங்கள் பல இயங்கி வருகின்றன. இந்த கிளை நிறுவனங்கள் பல நாடுகளிலும் தலைமையகத்தினைக் கொண்டு இயங்குகின்றன. அவற்றில் சில கிளை நிறுவனங்களின் கொடிகளே இங்கு பிரசுரமாகின்றன.

## ஐக்கிய நாடுகள் சபை பற்றிய முக்கிய விடயங்கள் சில...

ஐ.நா. சாசனத்தில் கைச்சாத்திட்டுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 192 ஆகும். ஐக்கிய நாடுகள் சாசனத்தினை உருவாக்க 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் 1945 இல் சென்.பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் பங்கேற்றனர். 1945 ஜூன் 26 ஆம் திகதி 50 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் சாசனத்தில் கைச்சாத்திட்டதுடன், 1945 ஒக்டோபர் 24 ஆம் திகதி சாசனம் நிறைவேற்றப்பட்டது.

பிரித்தானியா, சீனா, பிரான்ஸ் சோவியத் ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெற்றுள்ளன. ஐ.நா. சாசனத்தின்படி, அதன் பிரபல்யமானதும் முக்கியத்துவம் மிக்கதுமான சபையாக சிரேஷ்ட சபையினைக் குறிப்பிட முடியும். பாதுகாப்புச் சபை, பொருளாதார-சமூக சபை, சர்வதேச நீதிமன்றம், செயலாளர் காரியாலயம் என பிரதான நிறுவனங்களை இது உள்ளடக்கியுள்ளது. ஆரம்பகாலத்தில் பொறுப்பாளர் சபை என்ற ஒரு பிரிவு நிறுவப்பட்டபோதும், பின்பு அது கலைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி சீன மொழி, ஆங்கிலம், ஃப்ரெஞ்ச், ரஷ்யன், ஸ்பெனிஷ் ஆகிய மொழிகள் ஐ.நா.வின் உத்தியோகபூர்வ மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பொதுச் சபை, பாதுகாப்புச் சபை பொருளாதார-சமூக சபையில் அரபு மொழி சேர்க்கப்பட்டுள்ளது. -(பி)

சர்வதேச கடல்சார் நிறுவனம்

ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு

உலக வங்கி

உலக உணவு ஸ்தாபனம்

சர்வதேச தபால் சங்கம்

உலக சுகாதார அமைப்பு

உலக காலநிலை விஞ்ஞான அமைப்பு


ஐக்கிய நாடுகள் சுற்றுலா அமைப்பு

ஐக்கிய நாடுகள் தொழிற்சாலை அபிவிருத்தி அமைப்பு

உலக நுண்ணறிவுசார் சொத்துக்கள் அமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகாண் பயணிகள் ஒவ்வொரு காலப்பகுதிகளிலும் இருந்து வந்துள்ளனர். பயணத்திற்கு ஏற்றவாறான போக்குவரத்து சாதனங்கள் இல்லாத காலப்பகுதிகளில் தமது உயிரைப் பணயம் வைத்து இவர்கள் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்த சவால்களை வெற்றி கொண்டவர்கள் உலகுக்குப் புதிய தகவல்களை அள்ளித் தந்தனர். இப்னு பதூதா என்பவரும் இவ்வாறான ஒரு சிறந்த நாடுகாண் பயணி ஆவார். நீண்டகாலம் நீண்ட தூரம் பயணித்தவர் என்ற பெயரைப் பெற்ற இவர் பற்றிய தகவல்கள் பின்வருமாறு;










## சிவனொளிபாத மலையைக் காண இலங்கைக்கு வந்த

# இப்னு பதூதா

### இப்னு பதூதா

அபு அப்துல்லா முகமது இப்னு பதூதா அவர்கள் மொரோக்கோவின் டென்ஜியர் நகரத்தில் 1304 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை ஒரு நீதிபதியாவார். இவர், சிறு வயதிலேயே மதக் கல்வியும் அரபு இலக்கணமும் பயின்றார். இவரது குடும்பம் இஸ்லாமிய நெறிகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தமையால், இவரது கவனம் சிந்தனை முழுவதும் இறையியல் மீதே இருந்தது. இப்னு பதூதா தனது 20 ஆவது வயதில் புனித மக்காவிற்கு பயணம் மேற்கொண்டார். புனிதக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஆரம்பித்த இப்பயணமே இவரை உலக நாடுகளை காண்பதற்கு அவா கொள்ள வழி வகுத்தது.


### முதலாவது பயணம்

தமது 20 ஆவது வயதில் இப்னு பதூதா, புனித மக்கா நோக்கி செல்லத் தயாரானார். இது அவரது முதலாவது பயணமாகும். அக்காலகட்டத்தில் பயணங்களை மேற்கொள்வது சாதாரண விடயமல்ல. அத்துடன், பயங்கரமான அனுபவமாகவும் பயணங்கள் காணப்பட்டன. பயண முடிவிற்கு நீண்ட காலமும் எடுத்தது. இந்த துயரங்கள், கஷ்டங்கள் எதனையும் பொருட்படுத்தாத பதூதா தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதிலேயே மும்முரமாக இருந்தார்.

### பதூதாவின் பயணம்

இப்னு பதூதா புனித மக்காவிற்கு பயணம் மேற்கொள்ளும்போது, இதுவரை தான் அறிந்திராத நாடுகளையும், அவற்றின் கலாசார கூறுகளையும் அறிந்துகொள்ள ஆர்வப்பட்டார். புனித பயணம் முடிந்து பயணிகள் தத்தமது நாடுகளுக்கு திரும்பினாலும், இப்னு பதூதா மட்டும் அங்கேயே தங்கியிருந்து புனித பயணத்திற்கு வருகை தரும் மக்களைப் பற்றியும் புனித மக்காவின் தினசரி வாழ்க்கை முறைகள் பற்றியும் அறிந்து கொண்டார். இரண்டு வருடங்கள் புனித மக்காவில் தங்கியிருந்த இப்னு பதூதா அங்குள்ள கலாசாரப் பண்பாடுகளை மிகவும் நுண்மையாக அறிந்து கொண்டார்.

அங்கு தங்கியிருந்த இப்னு பதூதாவிற்கு, உலகெங்கிலும் உள்ள இஸ்லாமிய தலைவர்களை காணவேண்டும், அவர்களது கலாசாரப் பண்பாடுகளை அறிந்து கொள்ளவேண்டும் எனும் ஆர்வம் ஏற்பட்டது. புனித மக்காவில் தன்னுடன் நெருக்கமாக இருந்த வணிகர்கள், கடலோடிகள் போன்றோருடன் இணைந்து, தமது நீண்ட பயணத்தை ஆரம்பித்தார். ஆறு ஆண்டுகாலம் தொடர்ந்து பயணித்தார். இந்தப் பயணத்திற்காக அவர் கடல் மார்க்கம், தரை மார்க்கம் என்பனவற்றைப் பயன்படுத்தினார். சிலவேளைகளில் கழுதைகளின் மீது ஏறியும், பாய்மரக் கப்பல்களிலும், வண்டிகளிலும் அவர் தனது பயணங்களை மேற்கொண்டார்.




### பதூதாவின் இலங்கை விஜயம்

இப்னு பதூதா மாலை தீவுக்கு சென்றபோது, இலங்கை பற்றி அறிந்து கொண்டார். அவருக்கு இலங்கை வரவும் இலங்கையில் அமைந்துள்ள சிவனொளிபாத மலையைக் காண்பதற்கும் ஆர்வம் ஏற்பட்டது. இதனால், சிவனொளிபாத மலையைக் காண்பதற்காக யாழ். துறைமுகத்தில் வந்திறங்கினார். அப்பொழுது யாழ்ப்பாண நகரத்தை ஆரியச் சக்கரவர்த்தி ஒருவரே ஆட்சி செய்து வந்தார். அவர் ஒரு கொடுங்கோல் ஆட்சியாளர் என்று உலக வரலாற்றில் இடம்பெற்றவர். பதூதா தனது குழுவினருடன் தலைநகர் புத்தளத்திற்கு சென்றார். அரசனுக்கு காணிக்கைகள் செலுத்தி அரசனை தம் பக்கம் ஈர்த்துக்கொண்டார். பின்னர் தனது நோக்கத்தை அடைவதற்கான அரச அனுசரணையைப் பெற்றுக்கொண்டார்.

### பதூதா கண்ட சிவனொளிபாத மலை

பதூதா சிவனொளிபாத மலையை ரசித்த தகவல்கள் சுவாரஸ்யமானவை. பயணத்தின் நடுவில் இலங்கை மக்கள் அவருக்கு விருந்தளித்தனர் என்றும் சிவனொளிபாத மலையை சென்றடைய இரண்டு பாதைகள் உள்ளன என்றும் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். அவர் மலைக்குச் செல்வதற்காக பின்தங்கிய கஷ்டமான பாதையினையே தெரிவு செய்தார். இது மலை அடிவாரப்பகுதியாகும். இங்கு குகைகளும் நீரூற்றுகளும் உள்ளன. மலை உச்சிக்கு செல்ல கற்படிகள் செதுக்கப்பட்டு இரும்புப் பிடிகளும் பொருத்தப்பட்டிருந்தன. மலைமீது ஆதாமின் பாதச் சின்னம் பெரிய கல்லில் பொருத்தப்பட் டிருந்ததாகவும் அதன்மீது செல்வந்தர்கள் தங்கம், வெள்ளி, முத்துக்கள் ஆகிய விலைமதிக்க முடியாத பொருட்களை வைத்துச் செல்வதாகவும், வறியவர்கள் அவற்றை எடுத்துச் செல்வதாகவும் பதூதா தனது குறிப்புகளில் குறிப்பிட்டுள்ளார். மேலும், சிவனொளிபாதமலை அடிவாரத்தில் இலை உதிராத மரம் ஒன்று உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மலை உச்சியில் இருந்து பார்க்கும்போது இம்மரம் வேறு இடத்தில் இருப்பதனைப் போன்று தோன்றுவதனால், இம்மரத்தை 'நடமாடும் மரம்' என்றும் மக்கள் அழைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கை பற்றிய மேலும் சில தகவல்கள்

சிவனொளிபாத மலை விஜயத்தின் பின்னர் இலங்கையில் பல இடங்களுக்கு அவர் சென்றார். தெவிநுவர அதில் ஓர் இடமாகும். அங்கு யோகிகளும், பிராமணர்களும் உள்ள பெரிய ஆலயம் ஒன்று உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

-ப்ரியா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித்துவமிக்க இடது கை பழக்கமுடையோர்



நம்மில் அநேகமானோர் வலது கையைத்தான் அனைத்து விடயங்களுக்கும் பயன்படுத்துவர்.எழுதுதல், வீட்டு வேலைகள், விளையாட்டு இவ்வாறான வேலைகளுக்கு வலது கையைத்தான் அதிகம் பயன்படுத்துகின்றனர். ஆனால், எமது வகுப்பிலோ அல்லது குடும்பத்திலோ இடது கையை அதிகம் பயன்படுத்தும் சிலரை அவதானித்திருக்கக் கூடும். சிலவேளை நீங்கள் கூட இடது கைப்பழக்கமுடையவராக இருக்கலாம். இடது கையால் எழுதுதல், பந்து எறிதல், அடித்தல், உதைத்தல் வேலைகளைச் செய்தல், கருவிகளை கையாளுதல் என பல்வேறு செயல்களை இவர்கள் இடது கையால் செய்வர்.

## ஒகஸ்ட் -13 : சர்வதேச இடது கைக்காரர் தினம்

அப்படிப்பட்ட இடது கைப் பழக்கம் உடையவர்களுக்காக 1992 ஆம் ஆண்டு முதல் வருடத்தில் ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 13 ஆம் திகதி சர்வதேச இடது கைப்பழக்கமுடையவருக்கான தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இடது கைக்காரரின் தனித்துவத்தைக் கொண்டாடவும், அதிலுள்ள நன்மைகள், பிரச்சினைகள் என்பனவற்றை வலியுறுத்தவும் இந்த சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

### அறிவியல் ரீதியாக...

எமது மூளையை இடது மூளை, வலது மூளை என இருவகைப்படுத்தலாம். இடது பக்க மூளைதான் வலப்பக்க அவயவ கட்டுப்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகிறது. வலது மூளை- இடதுபக்க செயற்பாடுகளில் தாக்கம் செலுத்துகிறது. ஆகவே, இடது கை பழக்கமுடையவருக்கு அநேகமாக வலது மூளையின் செல்வாக்குத்தான் அதிகம் காணப்படும். ஆகவே, இந்த வலது மூளை செல்வாக்கு செலுத்துகின்ற ஏனைய விடயங்களிலும் அவர்களுக்கு அதிக திறமை அல்லது இயற்கையான புலமை இருக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதேபோல Cordination எனப்படும் பார்வைக்கும் கையசைவுக்குமான இசைவும் அதிகம் இருக்கும்.

### வரலாறும் தவறான நம்பிக்கைகளும்

இடது கைப்பழக்கம் மரபணு ரீதியாக கடத்தப்படுகிறது. அதாவது, நீங்கள் இடது கைப்பழக்கமுடையவர் என்றால், உங்கள் சந்ததிக்கும் அந்த வழக்கம் கடத்தப்படும். ஆனால், அதை மீறிப் பலருக்கும் வலது கைப்பழக்கம் பலவந்தமாகத் திணிக்கப்படுகிறது. உயிர் வாழ்வுக்கு அவசியமான இதயம் இடதுபுறம் இருப்பதனால் அந்த இதயத்தைக் காப்பதற்காக முற்காலத்தில் சண்டையிடும்போது வாள் வலக்கையிலும், கேடயம் இடக்கையிலும் பயன்படுத்தப்பட்டது.

என்றாலும், காலம் காலமாக, இன்றும்கூட வலக்கை வழக்கம் இடது கையை விட சிறந்தது எனும் தவறான நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும், விஞ்ஞான ரீதியில், வலக்கைப் வழக்கம் அதிகமான பேருக்கு ஏன் உருவானது என்பதற்கோ, அது சிறந்தது என்பதற்கோ எவ்வித தெளிவான காரணமும் இல்லை.









ஆனால், இவை எல்லாவற்றையும் விஞ்சி சாதித்துக் காட்டி இருக்கிறார்கள் பல இடது கைப்பழக்கமுடையவர்கள்.

### சாதனையாளர்கள்

★ உலகப் புகழ்மிக்க அமெரிக்க அதிபர்களான பராக் ஒபாமா, பில் கிளிண்டன், ஆபிரகாம் லிங்கன் ஆகியோர் இடது கைப் பழக்கமுடையவர்கள்.

★ மாவீரன் அலெக்ஸாண்டர், மாவீரன் நெப்போலியன், தத்துவஞானி ஜூலியஸ் சீஸர் என இவர்கள் அனைவரும் இடது கைகாரர்களே.

★ இடதுசாரி தலைவர்களான ஃபிடல் கெஸ்ட்ரோ, ஹியூகோ சாவேஸ் ஆகியோரும் இடது கைப் பழக்கம் உடையோரே.

★ நகைச்சுவை நடிகர் சார்ளி சப்ளின் (Charlie Chaplin)

★ மைக்ரோசொஃப்ட் நிறுவுனர் பில்கேட்ஸ் இடது கைப்பழக்கமுடையவர்.

★ விஞ்ஞானிகளாக, கண்டுபிடிப்பாளர்களாக திகழ்ந்த சாதனையாளர்கள் பெஞ்சமின் ஃபிராங்ளின் (Benjamin Franklin), ஹென்றி ஃபோர்ட் (Henry ford), டெஸ்லா (Tesla) போன்றவர்களும் இடது கை பழக்கமுடையோரே.





★ கலைஞர்கள், எழுத்தாளர்கள் என பரிணாமம் பெற்ற மைக்கல் அஞ்சலோ (Michel anjelo), லியனார்டோ டாவின்சி (Leonardo Davinsi), சூழலை நேசிக்கும் உலகப் புகழ்பெற்ற இலக்கியவாதியான ஹெலன் கில்லர் (Hellan Keller) ஆகியோரும் இடது கை பழக்கமுடையோரே.

### பிரச்சினைகள்

இயல்பாக ஏற்படும் இடது கை வழக்கத்தை மாற்றுவதாலும் வலது கைக்காரருக்கென்றே உருவாக்கப்பட்ட கருவிகளை பயன்படுத்தும்போதும், இடது கைக்காரர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

**உதாரணமாக:** நாம் தினசரி பயன்படுத்தும் கத்திரிக்கோல், டின் கட்டர், கத்தி என பல கருவிகள் வலது கை பாவனைக்கு ஏற்றவாறே அமைக்கப்பட்டுள்ளன. இது இடது கை காரர்களுக்கு அசௌகரியத்தையும், தாம் திறன் குறைந்தவர்கள் எனும் எண்ணத்தையும் ஏற்படுத்துகிறது. இசைக்கருவிகள் உள்ளிட்ட வேறு பெரிய சாதனங்களிலும் இதே பிரச்சினைதான். உண்மையான பிரச்சினையும் கோளாறும் அந்த கருவிகளிலேயே தவிர, இடது கை வழக்கமுடையவர்களில் அல்ல. இதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

எழுது பலகையுடன் கூடிய மேசையில் தொடங்கி பல விதங்களில் அவர்களுக்கு சம இடம்கொடுக்க வேண்டும். இல்லையென்றால் பல திறமைசாலிகளின் பயன்களை இந்த உலகம் இழக்க நேரிடலாம். இடது கைச் செயற்பாடு என்பது வெறும் வழக்கமோ அதில் எவ்வித கோளாறோ, ஏளனமோ இல்லை. இடது கைக்காரர்கள் தங்களின் தனித்துவத்தை எண்ணி பெருமைப்படவும் பிறர் அவர்களைப் புரிந்து நடக்கவும் வேண்டும். -ஜெ.பீ.ஏ.வீபாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ......................................................




08) 01. 39054 என்பதை எழுத்துக்களில் எழுதுக.

......................................................


02. கமல் பி.ப. 10:15 இற்கு நித்திரைக்குச் சென்று, அடுத்த நாள் மு.ப. 5:30 இற்கு விழித்தெழுந்தான். அவன் எவ்வளவு நேரம் நித்திரை செய்தான்?

......................................................

03. நிமால் தனது வீட்டிலிருந்து 12km தூரத்திலுள்ள தனது காரியாலயத்திற்கு 2/5 பங்கு தூரத்தை பஸ் வண்டியிலும் மிகுதித் தூரத்தை காரியாலய வாகனத்திலும் பயணம் செய்வான் எனின், அவன் காரியாலய வாகனத்தில் பயணம் செய்யும் தூரம் யாது?

......................................................

04.




இவ்வுருவின் i. சுற்றளவு யாது? ..........................

ii. பரப்பளவு யாது? ..........................

05. அக்காவின் நிறை 45kg 300g ஆகும். தங்கையின் நிறை 38kg 150g ஆகும். இருவரின் நிறைகளுக்கிடையேயுள்ள வித்தியாசம் யாது?

......................................................


06. ஒரு கலனில் 5 லீற்றர் 500ml நீர் உள்ளது. அவ்வாறான 7 கலன்களில் உள்ள நீரின் மொத்த அளவை லீற்றரில் தருக.

......................................................

07. 1kg சீனியின் விலை ரூபா 80.00 எனின், 200g சீனி வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?

......................................................

08.




அருகில் உள்ள வரைபடத்தில், பாடசாலையொன்றில் ஐந்தாம் தரத்தில் நான்கு பிரிவுகளிலுள்ள மாணவர்களின் முதலாம் தவணை வரவு தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து விடை தருக.

i. எந்த வகுப்பில் வரவு குறைவாக உள்ளது? ...........

ii. எந்த வகுப்பில் வரவு கூடுதலாக உள்ளது? ...........

iii. D வகுப்பிற்கும் C வகுப்பிற்கும் இடையிலுள்ள வேறுபாடு யாது? ................


09. 185m நீளமான நாடாவில் இருந்து அளவான 7 துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டால், மிகுதியாக இருக்கும் நாடாவின் நீளத்தினை m மற்றும் cm இல் தருக.

......................................................

10. OKLR.CC / 5467.00 இதன்படி 675.40 என்பதன் ரகசிய குறியீடு யாது?

11. மாணவன் ஒருவன் 100 வெண்டிக்காய் விதைகளை ஓர் இடத்தில் நாட்டினான். ஏழு நாட்களிலும் அவற்றில் எத்தனை விதைகள் முளைத்தன என்பதை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது.

| நாள் | முளைத்த விதைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 0 |
| 2 | 5 |
| 3 | 6 |
| 4 | 14 |
| 5 | 12 |
| 6 | 16 |
| 7 | 10 |




i. எத்தனையாம் நாளில் கூடுதலான விதைகள் முளைத்திருப்பதை அவன் கண்டான்?

......................................................

ii. 5 ஆம் நாளில் எத்தனை விதைகள் முளைத்திருந்தன?

......................................................

iii. ஏழு நாட்களிலும் முளைத்த விதைகளின் எண்ணிக்கையை காட்டும் சலாகை வரைபுக் கோட்டுப் படத்தை இங்குள்ள வரைபில் வரைந்து காட்டுக.

iv. ஏழு நாட்களிலும் முளைத்த மொத்த விதைகளின் எண்ணிக்கை யாது?

......................................................

(விடைகள் 20 ஆம் பக்கத்தில்)

## மீட்டல் குறிப்புக்கள்

- ★ விலங்குகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் - யால, வில்பத்து, றுகுணு
- ★ முலையூட்டி இனத்தைச் சேர்ந்த மீனினம் - திமிங்கிலம்
- ★ முலையூட்டி இனத்தைச் சேர்ந்த பறவை - வெளவால்
- ★ குட்டி ஈனும் பூச்சி இனம் - இராமபாணம், பிள்ளைப்பூச்சி
- ★ மரக்கட்டைகளை துளைத்து வாழும் பிராணி - கருங்குருவி
- ★ இலைகளை இணைத்து கூடுகட்டும் பிராணி - செவ்வெறும்பு
- ★ மண்ணில் குழிதோண்டி குட்டி ஈனும் அல்லது வாழும் பிராணி - முயல், எலி, முள் எலி
- ★ முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் முலையூட்டி - எறும்பு திண்ணி, பிளாட்டிபஸ்
- ★ இரவில் வெளிச்சத்தை வெளியிடுவது - மின்மினிப்பூச்சி
- ★ எச்சில் மூலம் தனது வாழ்விடத்தை அமைப்பது - சிலந்தி

- வாழை, முந்திரி, ஈச்சை முதலியவற்றின் காய்த்தொகுதி - குலை
- மா, புளி ஆகியவற்றின் காய்த்தொகுதி - கொத்து
- நெல், சோளம் ஆகியவற்றின் மணித்தொகுதி - கதிர்
- மா, வாழை ஆகியவற்றின் உள்ளீடு - சதை
- பலா, தோடை முதலியவற்றின் உள்ளீடு - சுளை
- கற்றாளையின் உள்ளீடு - சோறு
- அவரை, துவரை, பயறு ஆகியவற்றின் உள்ளீடு - பருப்பு
- மா, பலா, ஆகியவற்றின் வித்து - கொட்டை
- நெல், சோளம் முதலியவற்றின் வித்து - மணி
- கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து - விதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# செய்திகளை தொகுப்பது கட்டுரையல்ல...!




செய்திகளும் கட்டுரைகளுக்குமிடையே உள்ள வித்தியாசம் குறித்த ஆராய்வில் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டமொன்று குறித்து வடிவமைக்கப்படும் செய்தி தொடர்பாக கடந்தவாரம் பார்த்தோம். இதே நிகழ்வை, கட்டுரையாக அமைப்பது குறித்த சில விடயங்களை இப்போது ஆராய்வோம்.

முதலில் கட்டுரைக்கு தலைப்பை இடும்போது செய்திக்கு இடப்பட்ட விதத்தில் தலைப்பு அமையக் கூடாது. தலைப்பானது, ஆய்வு ரீதியானதாக இருக்க வேண்டும். உதாரணத்திற்கு அத்தலைப்பு பின்வருமாறு அமையலாம்.

**'பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல்;**
**பின்னணியில் இருந்தவர்கள் யார்?'**

இவ்வாறு தலைப்பு அமைவதானது, இச்சம்பவம் குறித்த பின்னணித் தகவல்களை மேலதிகமாக வாசகர்கள் அறியச்செய்வதாக இருக்கும். தலைப்பிற்கு அடுத்த படியாக அதற்குச் சிறப்பான இரண்டாம் நிலை தலைப்பொன்றையும் வழங்கலாம். அதற்கமைய, **'மாணவ தலைவருக்கு தொலைபேசி அச்சுறுத்தல்...'** என்று இன்னொரு தலைப்பையும் இடலாம். அடுத்த அம்சம்; கட்டுரையில் அடங்குகின்ற முக்கிய சில அம்சங்களை தூக்கலாக வாசகர்களுக்கு எடுத்துக்காட்டுவதாகும். இது Notes என்று குறிப்பிடப்படுகின்றது. உதாரணத்திற்கு கட்டுரையாளர் தனது ஆய்வில் குறித்துக் காட்டுகின்ற முக்கிய அம்சங்களைப் பந்தி உருவிலேயே சற்றுப் பெரிய எழுத்துக்களில் குறிப்பிடலாம். இந்த Notes ஆனது தேவைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்டதாகவும் இருக்கலாம். கட்டுரைப் பக்க அமைப்பில் இவற்றை வெவ்வேறு இடங்களில் பளிச்செனத் தெரியும் வகையில் இடம்பெறச் செய்யலாம். மேற்குறிப்பிட்ட பிரதான தலைப்பு, இரண்டாம் நிலைத் தலைப்பு, விசேட குறிப்புக்கள் (Notes) ஆகியனவற்றை கட்டுரையை எழுதி முடித்த பின்னர் கூட அமைத்துக் கொள்ளலாம்.

எனவே, முதலில் கட்டுரைக்கான தரவுகளை தயார் படுத்திவிட்டு கட்டுரையை எழுதலாம். இதில் நடந்த சம்பவத்தை முதலில் சுருக்கமாக விபரித்து விட்டு செய்திகளுக்கு அப்பால் தான் கேட்ட, அவதானித்த, தெரிந்து கொண்ட விடயங்களை இக்கட்டுரையில் சேர்க்கலாம். மேலும், செய்தி அமைப்பின் போது குறிப்பிடக் கூடாத 'கொமென்ட்ஸை' கட்டுரையில் தாராளமாக கட்டுரையாளர் குறிப்பிடலாம். ஆனால், இந்த கொமென்ட் ஆனது எவரதும் தனிப்பட்ட வாழ்க்கைக்கோ, பெயருக்கோ பங்கம் ஏற்படுவதாக இருக்கக்கூடாது. குற்றச் சாட்டுக்களுக்கு உரிய ஆதாரங்கள் இருப்பின் இங்கிதத்துடன் அவற்றை சுட்டிக்காட்டலாம்.



நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரையில் எவருமே சந்தேக நபராகவோ, குற்றஞ் சாட்டப்பட்டவராகவோதான் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட வேண்டும்

நீதிமன்றத் தீர்ப்பொன்று வரும் வரையில் எவருமே குற்றஞ்சாட்டப்பட்டவர்களாகவோ, சந்தேகத்திற்குரியோராகவோதான் கட்டுரையில் சுட்டிக்காட்டப்படவேண்டும். இடைக்கிடையே சில மேற்கோள்களைக் காட்டுவதன்மூலம் கட்டுரையாளர் சில சட்டச் சிக்கல்களிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். உதாரணத்திற்கு... 'தாக்குதல் நடத்தியோரில் சிவில் உடையில் சில பொலிஸாரும் காணப்பட்டனர்' என்று மாணவர் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது என்று குறிப்பிடலாம். இந்த தகவல் தவறானது என்று பொலிஸார் தரப்பில் மறுப்பு வந்தாலும், அது நேரடியாக கட்டுரையாளரைப் பாதிக்காது. இதனால், இப்படியான விடயங்களை மேற்கோள் காட்டி எழுதுவதானது, ஒரு வகையில் தந்திரோபாயமாகவே கைக்கொள்ளப்படுகின்றது.



## செய்தித் தொகுப்பு கட்டுரையாகாது

சிலர் கட்டுரை எழுதுவதாகக் கூறி முன்னைய நாட்களில் செய்திகளாக வந்தவற்றை அப்படியே ஒன்றாகத் தொகுத்து அதனைக் கட்டுரை என்று குறிப்பிடுகின்றனர். உண்மையில் இது செய்திகளின் தொகுப்பே அன்றி கட்டுரை எனும் வகைக்குள் அடங்காது. எனவே, கட்டுரை எழுதுகின்றவர் கட்டுரையின் வரைவிலக்கணத்தைத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

## தம்பட்டம் கூடாது

கட்டுரையாளர் சம்பவத்தை ஆழமாக குறிப்பிடுவது குறித்து தீவிரமாக இருக்கவேண்டுமே தவிர, தன்னைப்பற்றி வாசகர்களுக்கு தம்பட்டம் அடிப்பதாக அது இருக்கக்கூடாது. இயன்றவரையில் 'நான்' அல்லது 'என்னுடைய' போன்ற தன்னிலை வார்த்தைகளை தவிர்ப்பது நல்லது. கட்டுரையின் ஆழம், எழுத்து நடை ஆகியன இயல்பாகவே கட்டுரையாளர் யார் என்பதை காட்டிவிடும். (தொடரும்)

**-ரிஷபன்**


## வெல்லுங்கள்!

## விஜய் – TOP NEWS இணைந்து வழங்கும் வாரம் ஒரு 8GB Pen Drive பரிசு!!



பிரதி புதன்கிழமைகளில் 'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை இவ்வார 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

'TOP News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவுசெய்யப்படும். சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு 8GB Pen Drive பரிசாக வழங்கப்படும்.

*30.07.2014* TOP News கேள்விக்கான விடை:
அமெரிக்கா

Pen Drive வெற்றியாளர்:
ஆர்.வியாகரன்,
71, முகளம் குறுக்குத்தெரு,
வவுனியா.

அனுப்பவேண்டிய முகவரி:

Pen Drive
(13.08.2014)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'TOP News' SMS செயற்படுத்தும் முறை:




இச்சேவையின் ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்பதோடு வேலைவாய்ப்பு ALERT களையும் பெறமுடியும்.

**இவ்வார கூப்பன்:**
13.08.2014

விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தெருக்களின் ஆரம்பம்

அரசாங்கம் உயர்வர்க்கத்தினரிடம் இருந்து சுதந்திரமாக செயற்படுவதற்காகவே இந்த சீர்த்திருத்தத்தினைக் கொண்டு வந்தது. இதுவே அடிப்படை நோக்கமும் ஆகும். அவர்களின் அறிக்கையில் முகவர்களை அதிகாரம்மார் மற்றும் திசாவைகளை முன்னிலைப்படுத்தி வரவேற்றதோடு, உயர்வர்க்கத் தினரைக் கௌரவப்படுத்துவ தற்காக அவர்களின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டிருந்தனர். எனினும், கரையோரப் பிரதேசங்களில் நிகழ்ந்தது போலவே அதிகாரங்கள் அனைத்தும் சிவில் அதிகாரிகளின் கைகளுக்குச் சென்றது. இரண்டாவதாக மலையகத்தை கரையோரப் பிரதேசங்களுடன் இணைத்தனர்.

சுதந்திரமாக செயற்பட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட உயர்வர்க்கத்தினருக்கு இது பொறுக்க முடியாத ஒரு நிலையைத் தோற்றுவித்தது. எனினும், மறுபுறம் இலங்கை பொருளாதா ரம் மற்றும் சமூக நிலையில் உயர்வை எய்துவதற்கு இது பெரிதும் பயன்பட்டது. இலங்கையர் என்ற விசேட உணர்வை ஊட்டுவதில் சேர். எட்வர்ட் பார்ண்ஸ் ஆள்பதியின் ஆட்சிக்காலத்தின் இறுதி ஆண்டில் அவர் நாட்டில் சமாதான நிலையை தோற்றுவிக்க முழுமூச்சாக செயற்பட்டார்.

அவர் அரசியல் யாப்பை முறையாக நடைமுறைப்படுத்திக்கொண்டு சென்றமை அனைவரதும் பாராட்டைப் பெற்றது. கண்டியில் ஏற்பட்ட கலவரத்தை காரணமாகக் கொண்டும் அதனை அடக்கிய முறையாலும் மலையக மக்கள் பெரும் வறுமையை எதிர்நோக்கினர். 1818 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின் பின் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியது. கரையோரப் பிரதேசங்களுக்கும் மலையகப் பிரதேசங்களுக்கும் இடையிலான போக்குவரத்தை இலகுவாக்க பிரௌன்றிக் ஆள்பதி அவர்கள் பெருந்தெருக்களை அமைக்க ஆணையிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கல்விச் சேவைகள் அமைச்சு

## தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

# கட்டுரைப் போட்டி

## தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோபர் - 2014

ஒக்டோபர் மாதத்தில் அனுஷ்டிக்கப்படும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையுடன் இணைந்ததாக, தேசிய நூலக நண்பர்கள் அமைப்பும் மார்ட்டின் விக்ரமசிங்ஹ நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையும் இணைந்து நடாத்தும் கட்டுரைப் போட்டிக்காக, பாடசாலை மாணவர்களிடம் இருந்து கட்டுரைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரு வேறுபட்ட வயது மட்டங்களின்கீழ் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் இப்போட்டி நடாத்தப்படும்.



### கட்டுரைத் தலைப்பு

(தமிழ் மொழிமூல மாணவர்களுக்கு)

i. வயது மட்டம்:
12-15 வருடங்கள் (அதிகூடியது750 சொற்கள்)
நந்தி (பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்) அவர்கள் எழுதிய நூல்களில் ஒன்றைத் தெரிவுசெய்து, அதை ஓர் உயர்மட்டக் கலைப்படைப் பாகக் கருதுவதற்கான காரணத்தை விளக்கவும்.

ii. வயது மட்டம்:
16-18 வருடங்கள் (அதி கூடியது 1000 சொற்கள்)
பண்டிதமணி எஸ். கணபதிப்பிள்ளை அவர்கள், தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஆற்றிய சேவை பற்றி விபரிக்கவும்.

### போட்டிக்கான விபரங்களும் நிபந்தனைகளும்

1. மாணவர் ஒருவர் ஒரு கட்டுரையை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
2. சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் பாடசாலை அதிபரின் விதந்துரையுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. சுயாதீனமான நடுவர் குழு ஒன்றினால் கட்டுரைகள் தெரிவுசெய்யப்படுவதுடன், நடுவர் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும்.
4. சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் 2014 ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக, கீழே வழங்கப் பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை வெட்டிப் பூர்த்தி செய்து, கட்டுரையுடன் இணைத்து, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**முகவரி:**
தேசிய நூலக நண்பர்கள்,
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை,
14, சுதந்திர மாவத்தை, கொழும்பு-07.

### பரிசு விபரங்கள்

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிவாய்ந்த சான்றிதழுடன், இலங்கை தேசிய நூலகத்தின் அங்கத்துவத்தையும் இலவசமாகப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வெற்றிபெறும் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலை நூலகங்களுக்கு பெறுமதிவாய்ந்த புத்தகத் தொகுதி ஒன்றும் வழங்கப்படும்.
நான்காம் இடத்தில் இருந்து பத்தாம் இடம் வரை வெற்றிபெறும் மாணவர்களுக்கு ஆறுதல் பரிசாக பெறுமதிவாய்ந்த சான்றிதழும் ஞாபகச் சின்னமும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பெற, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையுடன் தொடர்புகொள்ளலாம். மேலதிக தகவல்களை வாசகர் சேவைப் பிரிவு, தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையிடம் பெற முடியும். தொலைபேசி இலக்கம்: 011-2685197/ 011-2674386

**பரிசு விபரங்கள்:** * முதலாம் இடம் ரூ. 5,000 * இரண்டாம் இடம் ரூ. 3,000 * மூன்றாம் இடம் ரூ. 2,000

### விண்ணப்பப் படிவம்

தேசிய வாசிப்பு மாதம் - ஒக்டோபர் - 2014
கட்டுரைப் போட்டி

வயது மட்டம்: வயது
12-15 ☐ 16-18 ☐

மாணவன்/மாணவியின் பெயர்: ..........................................

நிரந்தர முகவரி: ..........................................
..........................................

பிறந்த நாள்: ..........................................

தொலைபேசி இலக்கம்: ..................
ஈ-மெயில் (இருந்தால்)
..........................................

பாடசாலையின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:
..........................................

அதிபரின் பெயர்: ..........................

அதிபரின் ஒப்பம், திகதி: ..........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகள், இயற்கையின் எழில்மிகு படைப்பாகும். இவை உயிர் பல்வகைமைத்தன்மையால் வளம் பெற்றவை. தாவரங்கள், மிருகங்கள், பறவைகள், நீர்வீழ்ச்சிகள், ஆறுகள் என்பனவற்றின் தாயகம் இந்த மலைகளாகும். இத்தகைய சிறப்புக்களை தம்மகம் கொண்ட ஏராளமான மலைகள் எமது நாட்டிலும் காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைப் பற்றி இங்கு நோக்குவோம்.

# எமது நாட்டின் உ




## 'மலை' என்பது...

'மலை' என்பது தரையிலிருந்து உயர்ந்து செல்லும் நிலப்பகுதி ஆகும். மலையின் கீழ்ப்பகுதியைவிட மேற்பகுதி ஒடுங்கிக் காணப்படும். சில மலைகள் தனியாகவும், சில மலைகள் தொடராகவும் அமைந்திருக்கும். இன்னும் சில மலைகளில் பீடபூமியும் காணப்படும். மேலும் சிலவற்றில் பள்ளத்தாக்குகளும் காணப்படும். உலகிலுள்ள நிலப்பரப்பில் 1/5 பங்கு மலைகளால் சூழப்பட்டுள்ளன என்று புவியியலாளர்கள் கூறுகின்றனர்.

## மத்திய மலைநாடு

இலங்கையின் உயரமான பிரதேசமாக மத்திய மலைநாட்டுப் பகுதி காணப்படுகின்றது. இப்பகுதி சுமார் 300 மீற்றருக்கு மேற்பட்ட உயரமான பகுதியாகும்.இந்த பிரதேசத்தில் பிரதான மலைகள் பல அமைந்துள்ளதோடு, அந்த மலைத்தொடர்கள் நங்கூர வடிவில் அமைந்துள்ளதைக் காணலாம்.




## மலைகளின் தலைவன்-பீதுருதாலகால மலை





இது, நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ளது. இதன் உயரம் 2,524 மீற்றர் ஆகும். இலங்கையின் மிக உயரமான மலை இதுவாகும். இயற்கை எழிலுடன் காணப்படும் இந்த மலையை சென்றடைவது சற்று சிரமமான விடயமாகும். இப்பகுதியில் குளிர் காலநிலை நிலவுகிறது. இங்கு தனித்துவமான தாவர இனங்களும் காணப்படுகின்றன. சுற்றாடல் நிபுணர்களின் கருத்தின்படி, இங்குள்ள தாவரங்கள் இமயமலையில் மாத்திரம் காணப்படுபவையாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இத்தகைய தாவரங்களைப் போன்றே, தனித்துவமான உயிரினங்களும் இங்கு உள்ளன.

இம்மலை உச்சியிலிருந்து பல நீர்வீழ்ச்சிகள் ஆரம்பித்து கீழ்நோக்கிப் பாய்கின்றன. எழில் கொஞ்சும் சுற்றாடலைக் கொண்டிருக்கும் இப்பகுதியானது, தற்போது அழிவுக்கு உள்ளாகி வருகின்றது. பயிர்ச்செய்கையின் பொருட்டு இங்குள்ள காடுகள் அழிக்கப்படுவதனால், அதிக மழை நிலவும்போது, மண் அரிப்பும் ஏற்படுகின்றது.

## கிரிகல்பொத்த மலை



நுவரெலியா மாவட்டத்தில், ஹேராட்டன் சமவெளிக்கு மேற்குப் பக்கமாக இந்த மலை அமைந்துள்ளது. 2,395 மீற்றர் உயரம் கொண்ட இந்த மலை, இலங்கையின் இரண்டாவது உயரமான மலையாகும். ஹேராட்டன் சமவெளியினூடாக கிரிகல்பொத்த மலையை அடைய முடியும். மலையைச் சூழவுள்ள பிரதேசங்களில் இலங்கைக்கே உரித்தான தாவரங்கள், மிருகங்கள், பறவைகள் என்பன காணப்படுகின்றன.


## பறவைகளின் சுவர்க்கபுரியான தொட்டபொல மலை






2,357 மீற்றர் உயரமுடைய தொட்டபொல மலையே இலங்கையின் மூன்றாவது உயரமான மலையாகும். உடல் நடுங்கும் அளவுக்கு இங்கு குளிர் நிலவுவதோடு, சுற்றுப்புறம் எழில் மிக்கது. இலங்கைக்கே தனித்துவமான பறவைகள், மிருகங்களின் சரணாலயமாக இது திகழ்கிறது. உள்நாட்டுப் பறவைகளுக்கு மேலதிகமாக, சில காலங்களில் வேறு பகுதிகளிலிருந்து சுற்றுலாப் பறவைகளும் இங்கு வருகின்றன. மான், புலி போன்ற மிருகங்கள் இங்கு காணப்படுவதுடன், அரிதாகக் காணக்கிடைக்கும் சில மலர்களும் இங்கு உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உயரமான மலைகள்



## இலங்கையின் பிரதான மலைத்தொடர்கள்

* பீதுருதாலகால மலை
* கிரிகல்பொத்த மலை
* சிவனொளிபாத மலை
* ஹப்புத்தளை, நமுனுகுல மலைகள்
* நக்கிள்ஸ் மலை
* தொட்டபொல மலை

## புனிதத்தன்மை கொண்ட சிவனொளிபாத மலை


நுவரெலியா மாவட்டத்திற்கும் இரத்தினபுரி மாவட்டத்திற்கும் இடையில் இம்மலை அமைந்துள்ளது. இது 2,243 மீற்றர் உயரம் கொண்டது. புனிதத்தன்மை கொண்ட ஒரு மலையாகவே இது கருதப்படுகின்றது. மார்கழி மாத பௌர்ணமி தினம் முதல் வைகாசி பௌர்ணமி தினம் வரை மக்கள் இம்மலையைத் தரிசிக்கச் செல்கின்றனர். இரத்தினபுரி வழியாகவும் ஹட்டன் வழியாகவும் இம்மலையை சென்றடையலாம். மகாவலி, களனி, வளவே, களு போன்ற ஆறுகள் இம்மலையிலிருந்தே ஊற்றெடுக்கின்றன.

## வரலாற்றுக் கதை கூறும் ரிட்டிகல மலை



அநுராதபுர மாவட்டத்தின் கெக்கிராவைக்கு அருகில் இம்மலை அமைந்துள்ளது. 578 மீற்றர் உயரம் கொண்டது. அரிதாகக் காணக்கூடியதும் பெறுமதியான தாவரங்களும் இங்கு காணப்படுகின்றன. ஏராளமான மூலிகைச் செடிகளும் இங்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது. ரிட்டிகல மலையின் உச்சியை அடைந்தால், அநுராதபுர புனித இடம், மிகிந்தலை, மின்னேரியா, கிரித்தள வாவி என்பனவற்றைக் காணலாம்.

## சீகிரியா குன்றின் அமைப்பை ஒத்த பத்தலேகல மலை



இது, கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ளது. கண்டி-கொழும்பு வீதியில் கடுகண்ணாவையைத் தாண்டியதும் சீகிரியா குன்றின் அமைப்பில் உள்ள மலையே பத்தலேகல மலையாகும். இந்த மலையில் பெரிய கற்குகைகள் பலவும் காணப்படுவதோடு, பல உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் சிறந்த வாழ்விடமாகவும் பத்தலேகல மலை கருதப்படுகின்றது.

## உயிர்ப்பல்வகைமைத்துவம் மிக்க நக்கிள்ஸ் மலை

மத்திய மலைநாட்டில் கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் நக்கிள்ஸ் மலை அமைந்துள்ளது. 1,863 மீற்றர் உயரமுடையது. தும்பறை மலை என்றும் அழைக்கப்படும் இந்த மலையின் உச்சி, அடிக்கடி பனிப்படலத்தால் சூழப்பட்டிருக்கும். தூரத்திலிருந்து பார்க்கும்போது, கைவிரல் மொளிகள் போன்று தோற்றம் அளிப்பதால் 'நக்கிள்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. உயிர்ப்பல்வகைமைத்துவத்தினால் இம்மலைப்பகுதி வளம் பெற்றுள்ளது. பெறுமதி மிக்க மரவகைகள், மூலிகைச் செடிகள்



என்பன இங்கு காணப்படுவதோடு; மரை, காட்டுப்பன்றி, சிறுத்தை முதலான மிருகங்களும் பல்வேறு வகையான ஊர்வன, பறவைகள், வண்ணத்துப்பூச்சிகள் என்பனவும் இங்கு வாழ்கின்றன.

## பனிப்படலத்தால் சூழப்பட்ட நமுனுகுல



பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள நமுனுகுல மலை, 2,036 மீற்றர் உயரமுடையது. இலங்கையின் பிரதான மலைகளில் ஒன்றாகத் திகழும் நமுனுகுல மலை, எப்போதும் பனிப்படலத்தால் சூழப்பட்டிருக்கும்.

## தாவரவியல் பூங்காவாகத் திகழும் ஹக்கல மலை



நுவரெலியா-வெளிமடைக்கு இடைப்பகுதியில் அமைந்துள்ளது. இதன் உயரம் 2,170 மீற்றர் ஆகும். குளிரான பிரதேசமாக உள்ளது. மாலை வேளையில் மலை பனிப்படலத்தால் மூடப்படும். தனித்துவமான தாவரங்கள் பலவும் இங்கு காணப்படுகின்றன.

-இரஞ்சித் ஜெயகர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிணாம வளர்ச்சி குறித்து உலகறியச் செய்த

# சார்ள்ஸ் டார்வின்



சார்ள்ஸ் டார்வினின் தந்தையார் ஒரு மருத்துவராவார். டார்வினின் பாட்டனார் பிரசித்திபெற்ற தாவரவியல் விஞ்ஞானியாகத் திகழ்ந்தார். இத்தகைய குடும்பப் பின்னணியே சுற்றாடலுடன் இணைந்து பணியாற்றும் ஆர்வத்தை டார்வினிடம் உருவாக்கியது. அதன் இறுதி விளைவாக 'பரிணாமவாதத்தின் தந்தை' என்ற பெரும் புகழை டார்வின் பெற்றுக்கொண்டார்.





### 1809



இவர் பெப்ரவரி 12 ஆம் திகதி இங்கிலாந்தின் ஷ்ரெவ்ஸ்பரியில் பிறந்தார். குடும்பத்தில் ஆறாவது பிள்ளை இவரே ஆவார். டார்வினின் தந்தையார் - ரொபட் டார்வின். தாயார்- சுசானா டார்வின். டார்வின் எட்டு வயதாக இருக்கும்போது தனது தாயை இழந்தார்.

### 1818

ஷ்ரெவ்ஸ்பரி கல்லூரியில் இணைந்து ஆரம்பக் கல்வியைக் கற்றார்.



### 1825

மருத்துவம் கற்க எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டார். இக்காலகட்டத்தில் கடல்வாழ் உயிரினங்கள் குறித்து அதிக அக்கறை செலுத்தினார்.

### 1827

கடல் உயிரினங்கள் குறித்து ஆராய்ந்து, அது தொடர்பான அறிக்கையினை ப்ளினியன் சமூகத்திடம் சமர்ப்பித்தார்.

### 1828

மருத்துவப் பட்டப்படிப்பைத் தொடரும் முயற்சிகளில் ஈடுபட்டார். தாவரவியல் விஞ்ஞானியான பேராசிரியர் ஜோன் ஸ்டீவன்ஸ் ஹென்ஸ்லோவுடன் நண்பரானார்.

### 1831

மருத்துவப் பட்டப்படிப்பைக் கைவிட்டுவிட்டு, கிறிஸ்டி பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டம் பெற்றார்.





### 1831

டிசம்பர் 27 ஆம் திகதி, பேராசிரியர் ஜோன் ஸ்டீவன்ஸ் ஹென்ஸ்லோவுடன் உலக கப்பல் பயணம் ஒன்றை மேற்கொண்டார். இதன் போது இயற்கை உயிரினங்கள் பலவற்றை பற்றி அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

### 1836

ஒக்டோபர் 2 ஆம் திகதி மீண்டும் இங்கிலாந்துக்கு வந்தார். தனது கண்டுபிடிப்புகள் குறித்து கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார்.

### 1839



எமா வெஜ்வுட் என்பவருடன் திருமண பந்தத்தில் இணைந்தார். இருவருக்கும் பத்துக் குழந்தைகள் பிறந்தன. அவற்றில் ஏழு குழந்தைகள் மட்டுமே உயிர் பிழைத்தன.


### 1840

சுற்றுப்பயணத்தின்போது கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு Zoology of the Voyage of the Beagle என்ற நூலை எழுதினார்.



தனது நூல்களில் அவர் வரைந்த படங்கள் சில...

### 1842



மனிதனின் பரிணாம வளர்ச்சியினைப் படமாக வரையும் முயற்சியை ஆரம்பித்தார்.


### 1858



இயற்கை விஞ்ஞானியான அல்ஃப்ரட் ரசல் வொலசுடன் இணைந்து பணியாற்றினார். பரிணாம கோட்பாடு குறித்து 20 வருடங்கள் கற்றார்.

### 1882

ஏப்ரல் 19 ஆம் திகதி லண்டன் நகரில் மரணமடைந்தார்.





சார்ள்ஸ் டார்வின் பெற்றுக்கொண்ட விருதுகளும் பதக்கங்களும்.

1. The Royal Medal (1853),
2. The Wallaston Medal (1859),
3. The Copley Medal (1864)

டார்வினை நினைவுகூரும் உருவச் சிலைகள் சில.



சார்ள்ஸ் டார்வினை நினைவுகூரும் முத்திரைகள் சில




1859 நவம்பர் 24 ஆம் திகதி வெளியான உயிர்களின் தோற்றம் குறித்த விபரங்கள் அடங்கிய Origin of Species நூலே இது. இந்த நூல் ஐரோப்பா முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.




**HMS Beagle**

சார்ள்ஸ் டார்வின் உலகம் எங்கும் பயணித்த எச்.எம்.எஸ்.பீகல் என்ற கப்பல்.

சார்ள்ஸ் டார்வின் எழுதிய நூல்கள் (1840-1881)

The Zoology Of The Voyage Of The Beagle (1840), The Structure And Distribution Of Coral Reef (1842), On The Origin Of Specis (1859), Fertilisation Of Orchids (1862), The Variation Of Animals And Plants Under Demostication (1868), Decent Of Man (1871), The Expression Of Emotions In Man And Animals (1872), The Effects Of Cross And Self Fertilisation In The Vegetable Kingdom (1876), The Action Of Worms (1881)

-(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ராட்சத கிரகம்: Kepler 10c


Mega-Earth என்று சொல்லக்கூடிய ராட்சத பூமி ரக கோளங்களை பேரண்டத்தில் வானியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எமது பூமியைப் போன்றே அழுத்தமான மேற்பரப்பை இந்த கோளங்கள் கொண்டிருப்பதுடன், இவை பூமியை விட பல மடங்கு பெரிதானவை என்றும் கூறப்படுகின்றது. இதற்கமைவாக, பூமியை விட 17 மடங்கு எடை கூடிய கோளம் ஒன்று தொலைதூரத்து நட்சத்திரம் ஒன்றைச் சுற்றி வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இத்தகைய புதிய ரக கோளங்களை வகைப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



தற்போது ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த ராட்சத கிரகத்துக்கு 'Kepler 10c' என்று பெயரிடப்பட்டுள்ளது. பூமியிலிருந்து 560 ஒளியாண்டுகள் தூரத்தில் காணப்படும் நட்சத்திரம் ஒன்றைச் சுற்றி இந்த கிரகம் வலம் வந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு அதிகமான எடை ஒரு கிரகத்துக்கு இருக்குமானால், அது சுற்றுவட்டத்திலுள்ள அனைத்து ஹைட்ரஜன் அணுக்களையும் ஈர்த்து வியாழன் கிரகம் போன்று வாயுக் கிரகமாகவோ அல்லது நெப்டியூன் போன்று பனிக்கட்டிக் கிரகமாகத்தான் இருக்கவேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதினர்.

எனினும், அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் விதமாக 'Kepler 10c' அழுத்தமான மேற்பரப்பைக் கொண்டுள்ளதுடன், பூமியைவிட இரண்டு, மூன்று மடங்கு விட்டத்துடன் 17 மடங்கு எடையையும் கொண்டுள்ளது. இதனால், இந்தக் கிரகம் பூமியைவிட அடர்த்தியாக இருக்கும் என்றே கருதப்படுகின்றது.





# மோட்டார் சைக்கிள் பஞ்சரா?



# இதோ Patchnride

பஞ்சரான மோட்டார் சைக்கிளின் சில்லினைக் கழற்றாமல் வெறும் 60 நொடிகளுக்கும் குறைந்த நேரத்தில் சரி செய்யக்கூடிய புதிய சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.



Patchnride எனும் இச்சாதனத்தின் உதவியுடன் பல தடவைகள்



பஞ்சரான மோட்டார் சைக்கிளை சரிசெய்யக்கூடியதாக இருப்பதுடன், 3 மில்லிமீற்றர்கள் வரையான துளைகளையும்கூட சரிசெய்யும் ஆற்றலை இந்த புதிய சாதனம் கொண்டுள்ளது.

30 டொலர்கள் பெறுமதியான இச்சாதனத்தின் மூலம் ஒரே டயரில் 4 தொடக்கம் 5 வரையான தடவைகள் ஏற்பட்டுள்ள பஞ்சரினையும் சரிசெய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது.

# தந்தி பற்றி...

தந்தி (Telagreph) என்பது ஓரிடத்திலிருந்து தொலைவில் உள்ள இன்னுமோர் இடத்திற்கு விரைந்து செய்திகளை அனுப்பப் பயன்படும் ஒரு கருவி ஆகும். இக்கருவி மின்காந்த சக்தியின் துணையுடன் இயங்குகின்றது. இதனை 1837 ஆம் ஆண்டு அமெரிக்காவைச் சேர்ந்த சாமுவேல் மோர்ஸ் என்பவர் கண்டுபிடித்தார். அதனாலேயே இக்கருவியும் அவர் பெயரால் 'மோர்ஸ் தந்தி' என அழைக்கப்படுகின்றது. செய்தியை அனுப்புவதற்கும் மறுமுனையில் பெற்றுக்கொள்வதற்கும் தனித்தனியே இரு முனைகளில் கருவிகள் உள்ளன. செய்திகள் 'மோர்ஸ் சாவி' எனப்படும் கருவி மூலம் ஒரு முனையிலிருந்து அனுப்பப்படுகிறது. மறுமுனையில் அச்செய்தி 'மோர்ஸ் ஒலிப்பான்' எனும் கருவி மூலம் பெறப்படுகிறது. தற்போது இந்த முறை அருகி வருவதும் குறிப்பிடத்தக்கது.







# கடலைவிட பூமிக்கடியில் 3 மடங்கு நீர்!

நாம் வாழும் பூமியில் நிலப்பரப்பைவிட கடல் பகுதி 3 மடங்கு அதிகமாகும். தற்போது மொத்தக் கடல்நீரையும் விட 3 மடங்கு அதிகமான நீர் பூமிக்கு அடியில் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

நோர்த் வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியலாளர் ஸ்டீவன் ஜெகொப்சன் மற்றும் நியூமெக்சிகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிலநடுக்க ஆய்வாளர் ப்ரன்ட்சன் செமண்டிட் ஆகியோர் நடத்திய ஆய்வில் இவ்விடயம் தெரியவந்துள்ளது.

இந்த நீர்ப்பகுதியானது, வட அமெரிக்க பூமிக்கு அடியில் 400 மைல் ஆழத்தில் இருப்பதாகவும் ஆனால், அது திரவ நிலையில் இல்லை என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். பூமிக்கு மேல் பகுதியில் உள்ள நீரானது, பூமிக்குள் இறங்கியதாலும், பூமியின் அடியில் உள்ள பாறைத் தட்டுகள் உருகியதாலும் இந்த நீர்ப்பகுதி உருவாகியிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் கீதாவுக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**මාලා: ගීතා, මෙන්න ඔයාට චොකලට්.**
கீதா, மென்ன ஒயாட்ட ச்சொகலட்.
மாலா: **கீதா, இதோ உனக்கு ச்சொகலட்.**

**ගීතා: මේවා රට චොකලට් නේද?**
மேவா ரட்ட ச்சொகலட் நேத?
கீதா: **இவை வெளிநாட்டு ச்சொகலட் தானே?**

**මාලා: ඔව් ගීතා. අපේ මාමා ඊයේ රට ඉඳලා ආවා. එයා ගෙනාවා.**
ஒவ் கீதா. அப்பே மாமா ஈயே ரட்ட இந்தலா ஆவா. எயா கெனாவா.
மாலா: **ஆம் கீதா. எங்கள் மாமா வெளிநாட்டில் இருந்து நேற்று வந்தார். அவர் கொண்டு வந்தார்.**

**ගීතා: හරි රසයි මාලා. මාමා වෙන මොනවද ඔයාට ගෙනාවේ?**
ஹரி ரசய் மாலா. மாமா வென மொனவத ஒயாட்ட கெனாவே?
கீதா: **நல்ல ருசி மாலா. மாமா வேறென்ன கொண்டுவந்தார்?**

**මාලා: මට ලස්සන බෝනික්කෙක් ගෙනාවා.**
மட்ட லஸ்ஸன போனிக்கெக் கெனாவா.
மாலா: **எனக்கு அழகானதொரு பொம்மை கொண்டுவந்தார்.**

**ගීතා: ලොකු බෝනික්කෙක් ද?**
லொகு போனிக்கெக் த?
கீதா: **பெரிய பொம்மையா?**

**මාලා: ඔව් ගීතා. එයාගේ බොත්තමක් ඔබපුවාම එයා නටනවා. තව බොත්තමක් ඔබපුවාම අඬනවා.**
ஒவ் கீதா. எயாகே பொத்தமக் ஒபபுவாம எயா நட்டனவா. தவ பொத்தமக் ஒபபுவாம அன்டனவா.
மாலா: **ஆம் கீதா. அதனுடைய ஒரு பொத்தானை அழுத்தினால் அது ஆடும். இன்னொரு பொத்தானை அழுத்தினால் அழும்.**

**ගීතා: ඇත්තද? මට බලන්නත් ආසයි.**
எத்தத? மட்ட பலன்னத் ஆசய்.
கீதா: **உண்மையாகவா? எனக்கு பார்க்க ஆசையாக இருக்கிறது.**

**මාලා: ඔයා අද අපේ ගෙදර එන්නකෝ. මම පෙන්වන්නම්.**
ஒயா அத அப்பே கெதற என்னகோ. மம பென்வன்னம்.
மாலா: **நீங்கள் இன்று எங்கள் வீட்டிற்கு வாருங்கள். நான் காட்டுகிறேன்.**

**ගීතා: අද හවස මට පන්තිනේ. මම හෙට එන්නම්.**
அத ஹவச மட்ட பந்தினே. மம ஹெட்ட என்னம்.
கீதா: **இன்று பின்னேரம் எனக்கு வகுப்பு இருக்கிறது. நான் நாளை வருகிறேன்.**

**මාලා: හොඳයි. හෙට එන්න.**
ஹொந்தய். ஹெட்ட என்ன.
மாலா: **நல்லது. நாளை வாருங்கள்.**



**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ඊයේ ........... ඉඳලා ආවා.
2. ...................... ගෙනාවා.
3. අද ............... මට පන්ති.




இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால தனி வாக்கியம் ஆகிய இரண்டு வகை வாக்கியங்களிலும் காணப்படுகின்ற எதிர்மறை வாக்கியங்களை (Negative Sentence) மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

அ) நான் நேற்று அங்கே மீன் வாங்கவில்லை.
I did not buy fish there yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஆ) நான் அங்கே ஒருபொழுதும் மீன் வாங்குவதில்லை.
I do not buy fish there at all.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * I did not buy.<br>நான் வாங்கவில்லை. | * I do not buy.<br>நான் வாங்குவதில்லை. |

இ) நீ நேற்று முத்திரைகள் சேகரிக்கவில்லை.
You did not collect stamps yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஈ) நீ ஒவ்வொரு நாளும் முத்திரைகள் சேகரிப்பதில்லை.
You do not collect stamps everyday.
(நிகழ்கால தனிவாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * You did not collect.<br>நீ சேகரிக்கவில்லை. | * You do not collect.<br>நீ சேகரிப்பதில்லை. |

உ) நாங்கள் இந்த இடத்தை நேற்று சுத்தம் செய்யவில்லை.
We did not clean this place yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஊ) நாங்கள் இந்த இடத்தை ஒவ்வொரு நாளும் சுத்தம் செய்வதில்லை.
We do not clean this place everyday.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * We did not clean.<br>நாங்கள் சுத்தம் செய்யவில்லை. | * We do not clean.<br>நாங்கள் சுத்தம் செய்வதில்லை. |

எ) அவர்கள் அதிக பணம் சம்பாதிக்கவில்லை.
They did not earn much money.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஏ) அவர்கள் அதிக பணம் சம்பாதிப்பதில்லை.
They do not earn much money.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

| | |
|---|---|
| * They did not earn.<br>அவர்கள் சம்பாதிக்கவில்லை. | * They do not earn.<br>அவர்கள் சம்பாதிப்பதில்லை. |

ஐ) இந்தச் சிறுவர்கள் நேற்று கடலில் நீந்தவில்லை.
These children did not swim in the sea yesterday.
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

ஒ) இந்தச் சிறுவர்கள் ஒருபொழுதும் கடலில் நீந்துவதில்லை.
These children do not swim in the sea at all.
(நிகழ்கால தனி வாக்கியம் -Present Simple Tense)

* These children did not swim. (Past Tense)
இந்தச் சிறுவர்கள் நீந்தவில்லை. (இறந்தகாலம்)
* These children do not swim. (Present Tense)
இந்தச் சிறுவர்கள் நீந்துவதில்லை. (நிகழ்காலம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவினைக்கலை

# அம்மாவுக்கு ஒரு பரிசு!

இதோ! வீட்டில் செய்யக்கூடிய ஓர் அழகான கைவினைப்பொருள். இதனை நீங்கள் அம்மாவுக்கு பரிசாகக் கொடுக்க முடியும்.

**தேவையான பொருட்கள்:**

* வெற்று செமன் டின் ஒன்று
* பல வடிவ உலர்ந்த குச்சிகள்
* நன்கு ஒட்டும் ஒட்டுப்பசை

**1 ஆவது படிமுறை:**



குச்சிகளை நன்கு சுத்தப்படுத்தி உலர விடுங்கள்.

**2 ஆவது படிமுறை:**




அந்தக் குச்சிகளை படத்தில் காட்டியுள்ள வ[illegible] வட்டமாக வெட்டிக்கொள்ளுங்கள். இதன்போது, குச்சிகளில் வெடிப்பு ஏற்படக்கூடும். இதனால், கூர்மையான பெரிய கத்தியினால் வெட்டுவது உகந்தது. இதற்காக மூத்தவர்களின் உதவியை நாடுங்கள். இதனை மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.

**3 ஆவது படிமுறை:**



செமன் டின்னை நன்கு சுத்தப்படுத்தி உலர விடுங்கள்.

**4 ஆவது படிமுறை:**



செமன் டின்னைச் சுற்றி வெட்டிய குச்சியின் துண்டுகளை படத்தில் உள்ளவாறு ஒட்டுங்கள்.

**இறுதிக் கட்டம்:**

முழுமையாக குச்சி உருளைகள் ஒட்டப்பட்ட பின் அது மரத் தளபாடம் ஒன்றைப் போன்று தோற்றமளிக்கும். அதனை மேலும் அழகூட்ட வெக்ஸ் பூசலாம். இதனால், ஒரு பிரகாசத்தைக் காணமுடியும்.



நீங்கள் கைப்பணியொன்றை செய்து முடித்துவிட்டீர்கள். அதன்மீது பூக்களை வைத்து பூச்செண்டு போன்று அம்மாவுக்கு அன்பளிப்பாக வழங்குங்கள். அம்மா நிச்சயம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவார்.

**ஆலோசனை:**

மரக் குச்சியை வெட்டும்போது மிகக் கவனமாக உரிய அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும். குச்சிகளில் தேவையெனில் பல்வேறு நிறங்களையும் பயன்படுத்தலாம்.

# விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5774

சாதிர், கஹட்டோவிட்ட, கம்பஹா.



அங். இல: 5775

ஏ.எம்.அஸ்கர், குருனாகொடை, கொட்டியாகும்புர.



அங். இல: 5776

எஸ்.பவித்ரன், எதுராபொல, புளத்கொகுபிட்டிய.



அங். இல: 5777

ஜெ.பவிந்தன், கணேசபுரம், வவுனியா.



அங். இல: 5778

பி.பிரவீன், நெடுங்கேணி, வவுனியா.



அங். இல: 5779

ப.ஷாருஜன், பேசாலை, மன்னார்.



அங். இல: 5780

சு.அப்கர் அஹமட், G.S ஒழுங்கை, காத்தான்குடி-05.



அங். இல: 5781

பர்ஷான், கஹட்டோவிட்ட, கம்பஹா.



அங். இல: 5782

எச்.எம்.கைஃப், ஜயந்தி மாவத்தை, அநுராதபுரம்.



அங். இல: 5783

எஸ்.எம்.அர்சாத்கான், ஸமட் மாவத்தை, பேருவளை.

# தெரிந்து கொள்வோம்

* **எட்வர்ட் ஸ்னோவ்டன் என்பவரை ஐ. அமெரிக்கா உலகம் முழுவதும் ஏன் தேடி வருகின்றது?**



எட்வர்ட் ஸ்னோவ்டன் என்பவர் ஐ.அமெரிக்காவின் புலனாய்வுத் துறையின் (C.I.A) முன்னாள் ஊழியராவார். இவர் ஐ.அமெரிக்கா உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளின் ரகசியங்களை கண்காணிப்பது தொடர்பான செய்திகளை வெளிப்படுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டு அந்த நாடு இவரைத் தேடி வருகின்றது.

* **இந்தியாவின் முதலாவது ஆள்பதி நாயகமாக (கவர்னர் ஜெனரல்) பதவி வகித்த இந்தியர் யார்?**



ராஜாஜி (ராஜகோபால்ச்சாரியர்)

* **பிரித்தானியப் பிரதமர் ஒருவர் இலக்கியத்திற்கான நொபெல் பரிசைப் பெற்றுள்ளார். அவர் யார்? எப்போது?**



வின்செண்ட் சேர்ச்சில். 1953 இல்

* **அமெரிக்காவின் முதலாவது கறுப்பின ஜனாதிபதி பராக் ஒபாமா ஆவார். இவரின் தந்தையார் பெயர்என்ன?**



கென்யா நாட்டைச் சேர்ந்த பராக் ஹுசைன் ஒபாமா

* **கியூபாவின் ஜனாதிபதி யார்?**



ராவ்ல் கெஸ்ட்ரே

* **மியன்மாரின் இன்றைய ஆட்சித் தலைவர் யார்?**

தெய்ன் செய்ன்

* **ஐக்கிய அமெரிக்காவில்ஜனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை வருடங்கள்?**

4 வருடங்கள்

* **உலகில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதல் பெண் ஜனாதிபதி யார்?**



மர்மா ஸ்டெல்லா - ஆர்ஜன்டீன ஜனாதிபதி

* **புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவர் யார்?**

சேர். ஐசெக் நியூட்டன்

-உடுவை பரந்தாமன்

படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ......................................................

முகவரி: ......................................................

......................................................

பாடசாலை: ......................................................

வகுப்பு: ......................................................

திகதி: ......................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் அன்புப் பெற்றோர்

எனது வாழ்வில்
ஒளி எனும் தீபத்தை ஏற்றியவர்களே!
என் அறிவை விருத்தி செய்ய
ஆசான்களாகத் திகழ்ந்தவர்களே!

கண்ணை இமை காப்பது போல்
என்னை சுமையின்றிக் காத்தவர்களே!
என் நோயிற்கு அருமருந்தாக
அன்பு எனும் ஔடதத்தை
அள்ளித் தந்தவர்களே!

இச்சாதாரண மையினால்
ஆயிரம் கவி வரிகள் வடித்தாலும்
உங்கள் அன்பிற்கு அது ஈடாகாது
என் அன்புப் பெற்றோரே!

இல்மா அனீஸ்,
மாறை/ஸாஹிரா ம.வித்., வெலிபிடிய, வெலிகம.

# தாதுசேனனால் கட்டப்பட்ட கலாவாவியும் யோதக் கால்வாயும்

தாதுசேன மன்னன் தனது 26 வருட (கி.பி 456-477) ஆட்சியில் பல நீர்ப்பாசனப் பணிகளை மேற்கொண்டான். இவன் நிறுவியதாகக் கூறப்படும் 18 குளங்களில் மிக முக்கியமானது கலாவாவியாகும். அருகருகே அமைந்திருந்த 'கலா' மற்றும் 'பலலு' ஆகிய இரு வாவிகளையும் இணைத்துக் கட்டப்பட்டதே 'கலாவாவி' ஆகும். இது இவனுடைய பெரும் சாதனையாக மதிக்கப்படுகிறது. இவ்வாவியின் அணையானது, சுமார் 33/4 மைல்கள் நீளமானதோடு, அதன் உயரம் 40 அடிகளாகும். இவ்வாவி 6,380 ஏக்கர் நிலப்பரப்பு வரையிலும் பரந்துள்ளது.

இதனால், 6,971 ஏக்கர் வயல்நிலங்களுக்கு (சுமார் 7,000 ஏக்கர்) நீர் பாய்ச்சப்படுகிறது. வடமேற்கிலங்கையிலுள்ள கலா ஓயாவின் நீரை இவ்வாறு ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தின்மூலம் அப்பிரதேசத்தின் நெல் விளைச்சலுக்கு உபயோகப்படுத்தியமை தாதுசேனனது பெருஞ்சேவை எனலாம். அத்துடன், கலாவாவியிலிருந்து திஸ்ஸவாவிக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக மன்னனால் 54 மைல்கள் (87km) நீளமான 'யோதக் கால்வாய்' வெட்டப்பட்டது. தலைநகருக்குத் தேவையான நீர்வசதியைப் பெருக்குவதற்காகவே இக்கால்வாய் வெட்டப்பட்டது. இக்கால்வாயின் சாய்வு ஒரு மைலுக்கு 6 அங்குலங்களாகும். இவ்வளவு நுட்பமாக நீரைக் கொண்டு செல்லும் அளவுக்கு அக்காலம் பொறியியல் துறை மிகுந்த வளர்ச்சி அடைந்திருந்தமை இதன் வாயிலாகப் புலனாகிறது.

Y.R.பெணில்டஸ்,
கே/தல்துவை மு.ம.வித்., அவிசாவளை.





# சிலந்தி கற்றுக் கொடுத்த பாடம்



போரில் தோல்வி அடைந்த அரசன் ஒருவன் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடி ஒளிந்தான். அந்த அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனது படை மிகவும் சிறிதாக இருந்தமையால், அவனால் போரில் வெற்றி கொள்ள முடியவில்லை.

தோல்வியுற்ற அரசனைக் கொல்லுமாறு அவனை வென்ற அரசன் கட்டளை பிறப்பித்தான். அதனால், தோல்வி கண்ட மன்னன் ஒரு காட்டிற்குச் சென்று அங்கிருந்த ஒரு குகையில் ஒளிந்துகொண்டான். தனது நிலையால் மிகவும் மனவருத்தம் கொண்ட அந்த அரசன் மனச்சோர்வினால் துணிவிழந்தான். ஒரு நாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது.

ஒருநாள் அந்த சிறிய சிலந்தியின் செயல் மன்னனின் கவனத்தைக் கவர்ந்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக அது முயற்சிசெய்துகொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும்போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்துவிட்டது. இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடியும் மறுபடியும் முயன்றது. இறுதியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது.

இதனை அவதானித்த அரசன் சிந்தித்தான். 'இச் சிறு சிலந்தி பலமுறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை, நான் ஏன் கைவிடவேண்டும்? நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சிசெய்ய வேண்டும்' என்று எண்ணினான். மீண்டும் தன் எதிரியுடன் போர் புரியத் தீர்மானித்தான். அவன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தனது நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான். தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து மீண்டும் பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் மீண்டும் தீவிரமாகப் போர் புரிந்தான். இறுதியில் போரில் வெற்றிபெற்று, தன் அரசைத் திரும்பப் பெற்றான். எனினும், தனக்கு அறிவுரை போதித்த அந்த சிறிய சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

# நாடுகளின் விமான சேவைகள்

- ★ இலங்கை - ஸ்ரீலங்கன் எயார்லயன்ஸ்
- ★ இந்தியா - இந்தியன் எயார்லயன்ஸ்
- ★ பிரான்ஸ் - எயார் பிரான்ஸ்
- ★ சுவிஸ் - சுவிஸ் எயார்
- ★ ஜப்பான் - ஜப்பான் எயார்லயன்ஸ்

அ.மு.இஜாஸ், பெருக்குவற்றான்

# பொது அறிவுத் தகவல்கள்

- இமயமலைத் தொடரின் நீளம் எத்தனை கிலோமீற்றர்?
  2,400 கிலோமீற்றர்
- எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் என்ன?
  8,848 மீற்றர்
- உலகின் இரண்டாவது பெரிய சிகரம் எது?
  மவுண்ட் காட்வின் ஆஸ்டின் 8,611 மீற்றர்கள்




- இமயமலையில் அமைந்துள்ள பிற சிகரங்கள் எவை?
  கஞ்சன்ஜங்கா (8,586 மீற்றர்)
  நங்கா பார்பட் (8,126 மீற்றர்)
  தவளகிரி (8,107 மீற்றர்)
  நந்திதேவி (7,816 மீற்றர்)
- விந்திய மலைகளுக்கு தெற்கில் காணப்படும் பீட பூமி எது?
  தக்கண பீடபூமி
- இமயமலை எந்த வகையான மலைக்கு உதாரணமாக உள்ளது?
  மடிப்பு மலை

தொகுப்பு: பாரா, உயன்வத்த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி இல. 98



### மேலிருந்து கீழ்

01. அம்பட்டன்.
02. ஆண் ஆடு. (தலைகீழ்)
04. சமையலின்போது பெரும்பாலும் பயன்படும்.
05. கடுமை. (தலைகீழ்)
06. ஆகாயம்.
09. '.... வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்' என்பர். (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

முன்னைய கால கிராமப்புறங்களில் வழக்கு விசாரிக்கும் அதிகாரம் பெற்றவர்.

03. உடல் அசைவுக்கு உதவக்கூடிய சுருக்கி-விரியும் தன்மை கொண்ட திசுத்தொகுப்பு.
04. தேவி-எதிர்ப்பாற் சொல்.
07. குயில், இதன் கூட்டில்தான் முட்டைகளை இடும்.
08. சவூதி அரேபியாவில் இந்தக் கிணறுகள் ஏராளமாக இருக்கின்றன.

### குறுக்கெழுத்துப் போட்டி இல.97 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 த | டு | ப் | 2 பூ | 3 சி | |
| லை | 4 ஆ | | 5 பா | ன | ம் |
| மு | | 6 சோ | ள | ம் | |
| றை | 7 க | | ம் | | 8 தூ |
| | ன் | | | 9 ந | ரி |
| 10 ப | னி | ம | ழை | | கை |




'நடராஜ் அறிவுக்கு விருந்து' பகுதியிலுள்ள 1, 2, 3 ஆகிய போட்டிகளுக்கான விடைகளை தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி, 20.08.2014 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.


நடராஜ் அறிவுக்கு விருந்து - 37
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

பரிசுப் பொதி
1ஆம் பரிசு ரூ. 700/=
2ஆம் பரிசு ரூ. 500/=
3ஆம் பரிசு ரூ. 300/=


நடராஜ் அறிவுக்கு விருந்து போட்டிகளுக்கான விடைகளை அனுப்பும்போது, உங்கள் பெயர், வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை, நகரம் என்பனவற்றை கட்டாயம் எழுதி அனுப்புங்கள்.

## நடராஜ் அறிவுக்கு விருந்து - 35 விடைகள்


போட்டி: 01



போட்டி: 03



போட்டி: 02



## நடராஜ் அறிவுக்கு விருந்து - 35 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1ஆம் பரிசு
நரேந்திர பிரசாத், கஞுவாஞ்சிக்குடி-08.

2ஆம் பரிசு
எம்.எஸ்.ஷாஸா, ஹெம்மாதகம.

3ஆம் பரிசு
டபிள்யூ.அபினேசன், கொழும்பு-15.

பாராட்டுப் பெறுவோர்:

- மதி பாரதி, நாவலப்பிட்டி.
- எம்.ரம்ஸான், திஹாரிய.
- எஸ்.சம்சுன் நிஸா, மாத்தறை.
- என்.ஹரேன், கொழும்பு-04.
- வி.சஷி, பூண்டுலோயா.
- அக்ரம் மொஹமட், புத்தளம்.
- ஷெரோன் ஷாலினி, மன்னார்.
- ப.அமிதா, ஹட்டன்.
- எஃப்.ஸலாமா, மீராவோடை.
- எம்.அஸ்லி, பேருவளை.

படங்களுக்குரிய பெயர்களை எழுத்துக் கூட்டத்தினுள் இனங்கண்டு, நிறந்தீட்டுக


1




| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | N | O | T | E | P | A | D | M | G |
| C | R | A | Y | O | N | B | F | A | L |
| S | K | J | E | R | A | S | E | R | U |
| C | X | S | V | Z | B | O | O | K | E |
| I | W | T | A | C | K | M | O | E | F |
| S | H | A | R | P | E | N | E | R | O |
| S | T | P | E | N | C | I | L | J | L |
| O | A | L | C | H | A | L | K | P | D |
| R | P | E | Y | Q | S | T | J | E | E |
| S | E | R | U | L | E | R | U | N | R |


2

### இடைவெளிகளை நிரப்புக




3

### அடுத்து வர வேண்டியது எது?



Sponsored by

NATARAJ®
Packsco Ceylon (Pvt) Ltd, P.O Box-165, Colombo-03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் தவறு செய்யும்போது பிறரின் வசை மொழிகளை நம் மனம் ஏற்க மறுப்பதேன்?

நம்மில் பெரும்பான்மையானோர் மகத்தான காரியங்களைச் செய்யும்போது பிறரின் பாராட்டுக்களை மிகவும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், நம்மில் பலர் சில வேளைகளில் தாம் செய்யும் காரியங்களில் தவறு நிகழ்ந்துவிட்டால், பிறரின் வசை மொழிகளை விமர்சனங்களை அவ்வளவாக ஏற்றுக்கொள்வதில்லை. இதற்கான காரணத்தை லண்டனைச் சேர்ந்த மூளை மற்றும் நரம்பியல் விஞ்ஞானிகள் சிலர் சமீபத்தில் விளக்கியுள்ளனர்.



செய்யும் செயல்கள் எதிர்மறையான முடிவைத் தரும்போது அது குறித்து மிகக் குறைந்த கவனத்தையே செலுத்துவதாக இந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மோசமான விளைவை ஏற்படுத்திய செயல்கள் குறித்த முடிவுகளை எடுப்பதில் சாதாரண செயல்களை விட நமது மூளை அதிக நேரத்தை எடுத்துக்கொள்வதால் நம்மில் பெரும்பான்மையினர் செயல்களுக்கான பொறுப்பினை உடனே ஏற்றுக்கொள்ள இணங்குவதில்லை. இதனால்தான் அனைத்துச் செயல்களையும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் தன்மை நம்மில் மிகச் சிலருக்கே வாய்த்திருக்கின்றது.

இதனை விஞ்ஞான ரீதியாக நிரூபிப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சிலரிடம் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் அவர்களின் செயல் நேர்மறையை விட எதிர்மறையாக இருக்கும்போது குறித்த நபர்களின் மூளை அதை உணர்ந்துகொள்ள அதிக நேரம் எடுத்துக்கொண்டமை புலப்பட்டது. இந்த ஆராய்ச்சி முடிவை லண்டனில் உள்ள கானிட்டிவ் நரம்பியல் விஞ்ஞான பல்கலைக்கழகப் பேராசிரியர் பட்ரிக் ஹக்கார்ட் என்பவரது குழுவினர் வெளியிட்டுள்ளனர்.



கபகமுவ, புளத்கொகுபிடியவைச் சேர்ந்த ராஜரட்ணம்-சிவரஞ்சனி தம்பதியரின் செல்வப் புதல்வன் இமேஷ்ராஜ், தனது பத்தாவது பிறந்தநாளை 15.08.2014 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் இறையருள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.






தெமட்டகொடையைச் சேர்ந்த சாந்தகுமார்-இந்திராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் அம்ரித், தனது ஆறாவது பிறந்தநாளை 11.08.2014 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அம்பாள் அருள்பெற்று பல்கலையும் கற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



பாத்திமா ஜமினா, களு/முஸ்லிம் மகளிர் ம.வித்., களுத்துறை.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ரா.நவ்ஷனன், லொனக் தமிழ் ம.வித்., வட்டவளை.



எஸ்.யுஸ்ரப் அஹமட், முஸ்லிம் மத்திய ம.வித்., சம்மாந்துறை.



த.மிலக்சன், தமிழ் மத்திய ம.வித்., வவுனியா.



தா.நிதுர்சன், மத்திய கொழும்பு இந்து ம.வித்., கொழும்பு-15.



கெ.ராஸியா, அல்/அக்ஷா மு.ம.வித்., எஹலியகொட



ப.யதுர்சிகா, கொ/குமர உதயம் த.வித்., நாரஹேன்பிட்ட.



அபிஷேக் தேவா, ம/மா/ஹோல் பூண்டுலோயா த.ம.வித்., பூண்டுலோயா.

## பகுதி -II விடைகள்

01) 1. பாலிற்கு/பால்
2. வானில் நிலவு வரப்போவதையிட்டு
3. இரவு/இரவு மங்கை
4. மாலை/நிலவு/வான்/கடல்/கண்/மங்கை
5. போகுது/பார்க்க/மலர்ந்து/போகின்றாள்
6. மகிழ்தல்/சந்தோஷம்
7. நீல/கோலக்
8. மாலை/மாலைவேளை

02) 1. நிதி/பணம்/திரவியம் 2. களவு

03) 1. பென்னம் பெரிய 2. இறக்கம்

04) 1. முனிவன் 2. அம்புலி 3. வாழைப்பூ
4. வாழையிலை 5. ஆறு

05) 1. நீ எங்கே அமர்ந்திருக்கிறாய்? /எங்கே நீ அமர்ந்திருக்கிறாய்?
2. நான் பாயின் மேல் அமர்ந்திருக்கிறேன் / நான் பாயில் அமர்ந்திருக்கிறேன்
3. அது என்ன?
4. அது ஒரு சிவப்பு மொட்டு / அது சிவப்பு மொட்டு


06) 1. பால் குடிக்க வாருங்கள்.
2. எங்கள்/ எங்களுடைய மாமி வருகிறார்.

07)

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2 | 04. 1 | 07. 1 | 10. 2 | 13. 2 |
| 02. 2 | 05. 2 | 08. 3 | 11. 3 | 14. 3 |
| 03. 3 | 06. 2 | 09. 1 | 12. 3 | 15. 3 |

08) 01. முப்பத்தொன்பதாயிரத்து ஐம்பத்து நான்கு
02. 7 மணி 45 நிமிடங்கள்
03. 7km 200 m / 7.2 km
04. (i) 28cm (ii) $13cm^2$
05. 7kg 150g
06. 38.5l
07. ரூபா 16.00
08. (i) C வகுப்பு (ii) D வகுப்பு (iii) 500
09. 3m, 300cm
10. LRO.KC

11) i. 6 ஆம் நாள் ii. 12 விதைகள்
iii.




iv. 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்



**ஜோன் (ச்)சார்ன்லீ**
(John Charnley)
1972 - பிரித்தானியா




செயற்கை இடுப்பு மாற்று சிகிச்சை




**கொட்ஃப்ரெட் கிர்க் கிறிஸ்டியன்சன்**
(Godtfred Kirk Christiansen)
1958 - டேனிஷ்



கட்டுமான விளையாட்டுப் பொருள் (Lego)



**ஜோன் கிறிஸ்தோஃப் டென்னர்**
(Johann Christoph Denner)
1690 - ஜேர்மன்



இசைக்கருவி (Clarinet)



**ஹென்சன் க்ரிகொரி**
(Hanson Gregory)
1847 - அமெரிக்கா



Doughnut



**அகியோ மொரிடா**
(Akio Morita)
1979 - ஜப்பான்



Walkman



**அம்ப்ரொய்ஸ் பேர்**
(Ambroise Pare)
1575 - பிரான்ஸ்



செயற்கைக் கால்கள்

# நாடுகளும் பணத்தாள்களும்




**எல் சல்வடோர்**
அமெரிக்கன் டொலர்
(USD)




**எரிட்ரியா**
எரிட்ரியன் நக்ஃபா
(ERN)




**எஸ்தோனியா**
யூரோ
(EUR)




**எத்தியோப்பியா**
எத்தியோப்பியன் பிர்
(ETB)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி விருது பெற்ற சாரணர்கள்

அண்மையில் நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் இலங்கை சாரணர் சங்கத்தின்கீழ் உள்ள மாவட்டங்களிலிருந்து ஜனாதிபதி சாரணர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுக்கு கடந்த ஜூலை 30 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இவ்விருதுகளை இலங்கை பிரதம சாரணரும், ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ அவர்கள் வழங்கினார். பெண் சாரணர்கள் ஜனாதிபதி விருதினை முதல் தடவையாகப் பெற்றுக்கொண்டமை சிறப்பம்சமாகும். இந் நிகழ்வுகள் தொடர்பான படங்களை இங்கு காணலாம்.















## சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரண உறுப்பினர்கள் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| டொமினிகன் குடியரசு | 1,269 | 1930 | 1926 |

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)





## விஜய் சாரணர் உலகம்

# வீசப்பட்ட சோடாப் போத்தலிலிருந்து....



வீசப்பட்ட சோடாப் போத்தலில் இருந்து பேனா மற்றும் பென்சில் வைக்கக்கூடிய மாதிரி ஒன்றினைத் தயாரிக்க முடியும். இதற்கு தேவையானவை: சோடா வெற்றுப் போத்தல், பாவிக்கக்கூடியதான Zip, இவற்றை ஒட்டுவதற்கு ஏற்றதான பசை. இவற்றை சாரணர்கள் தமது சாரணர் அலுவலகத்திலும் மற்றும் பாசறைகளில் அணிமுறை செயற்பாட்டிலும் பயன்படுத்தலாம்.



*யாழ்.திரி சாரணன் அமலன், தனது 21 ஆவது பிறந்தநாள் நிகழ்வினை சிறப்பாகக் கொண்டாடினார். அத்துடன், அவர் சாரணர் சின்ன அமைப்பில் தனது கேக்கினை வடிவமைத்து கொண்டாடியமை குறிப்பிடத்தக்கது.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# செயற்கைப் பசும்பால் உற்பத்தி; மாட்டுத் தொழுவங்கள் அழிந்து போகும் அபாயம்!

மாட்டுத் தொழுவங்கள், பண்ணைகள் மற்றும் பால் உற்பத்தி நிலையங்கள் இல்லாத உலகொன்று மிகக் கிட்டிய எதிர்காலத்தில் உதயமாகும் என நம்பப்படுகின்றது. அமெரிக்க விஞ்ஞானிகள் மூவர் செயற்கையாக பசும்பாலை உற்பத்தி செய்யும் முறையை மிக வெற்றிகரமாக ஆய்வுசெய்து வருவதே இதற்கு காரணமாகும். இதன் விசேட அம்சம் என்னவென்றால், இந்த பாலானது (கொலஸ்ட்ரோல்) கொழுப்பு மற்றும் நீரிழிவுக்குரிய சர்க்கரை அற்றது.

ரியான் பாண்டியா, பெருமாள் காந்தி, இஷா தத்தர் ஆகிய இந்த மூன்று விஞ்ஞானிகளும் 2015 ஆம் ஆண்டில் தமது கண்டுபிடிப்பை வெளியிடுவதற்கு ஆயத்தமாகின்றனர். வட அமெரிக்காவில் உள்ள பாரிய பாற் பண்ணைகளைப் பார்த்தபின்னர் இலகுவான முறையில் செயற்கைப் பசும்பாலைத் தயாரிப்பதற்கான எண்ணம் தமக்குத் தோன்றியதாக இந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



எனினும், இந்த செயற்கைப் பால் உற்பத்தியின்போது தரம் குறைந்த பால் உற்பத்தி செய்யப்படலாம். மேலும், பசுமை வாயு வெளியேற்றம் மற்றும் நீர் மாசடைதல் போன்றவை நிகழ்வதால், அவை தமக்குப் பெரும் பிரச்சினையாக உள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். எவ்வாறாயினும், இந்த பிரச்சினைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை தாம் எடுப்பதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

சுவையும் மணமும் போஷனையும் கிடைக்கும் வகையில் உற்பத்தி செய்யப்படும் இந்த பாலில் 6 வகையான புரதமும் 8 வகையான கொழுப்பும் அடங்கியுள்ளதாக இந்த விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஆசியா உள்ளிட்ட உலகின் மொத்த ஜனத்தொகையில் 75% மானோர் பாலில் அடங்கியுள்ள சீனியை விரும்புவதில்லை. அதனால், சீனியில்லா உற்பத்தியை தாம் மேற்கொள்ளப் போவதாகவும் இன்னும் 100 வருடங்களில் முழு உலகமும் செயற்கைப் பசும்பாலையே அருந்தக்கூடும் எனவும் அவர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

-ஜெய்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ISS சென்ற ஓர்பிடல் விமானம்

ஓர்பிடல் சயன்ஸஸ் நிறுவனம், அண்மையில் சரக்குகளை ஏற்றிச் செல்லும் ஆளில்லா விண்வெளி விமானம் ஒன்றை சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS- International Space Station) அனுப்பியது. வேர்ஜினியாவின் வொலொப்ஸ் தீவில் இருந்து இந்த விண்வெளி விமானம் ஏவப்பட்டது. என்ட்டாரெஸ் ரொக்கெட் இந்த விமானத்தை விண்ணுக்கு எடுத்துச் சென்றது. இந்த ஆளில்லா விண்வெளி விமானம் சுமந்து சென்ற சரக்கின் நிறை 3,653 றாத்தல்களாகும். செய்மதி, உணவுகள், விண்வெளி ஆய்வுக்கான உபகரணங்கள் என்பன இவற்றுள் அடங்குவதாக ஓர்பிடல் சயன்ஸஸ் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. ஓர்பிடல் சயன்ஸஸ் நிறுவனமானது, நாஸாவுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்ற எட்டு விண்வெளித் திட்டங்களில் இரண்டாவது திட்டம் இதுவாகும். இதனை 'Orb-2' என்று அழைக்கின்றனர். 'Orb-3' திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் அமுல்படுத்தப்படவுள்ளது.



# வானர இனத்திற்கும் மனித இனத்திற்கும் இடைப்பட்ட சந்ததி

**வானர இனத்தில் இருந்தே மனிதன் பரிணாம வளர்ச்சியை எய்தினான் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும். ஆனால், வானர இனத்திற்கும் மனித இனத்தின் தோன்றலுக்கும் இடைப்பட்ட காலத்தில் எத்தகைய தோற்றத்திலான உயிரினம் இருந்தது என்பது பற்றி அண்மையில் விஞ்ஞானிகளுக்கு ஒரு சான்று கிடைத்துள்ளது.**



மறைந்துபோன இந்த சந்ததி 'கராபோ' என்று அழைக்கப்படுவதாக பேராசிரியர் லீ பர்கர் தெரிவித்துள்ளார். லீ பர்கர், தென் ஆபிரிக்காவின் ஜொஹன்னஸ்பர்க் நகரிலுள்ள விட்வோட்டர்ஸன்ட் பல்கலைக்கழகத்தின் பரிணாம உயிரியல் விஞ்ஞானப் பிரிவு பேராசிரியராவார். தனக்குக் கிடைத்த புதைபடிமங்களை சான்றாக வைத்து, புதைபடிம வரைஞரான ஜோன் கர்ச்சே என்பவர் கணினி வரைபின்மூலம் 'கராபோ' இனத்தின் முகச்சாயலை வரைந்துள்ளார். இந்த கணினி உருவத்தினை அடிப்படையாக வைத்து கராபோ இனத்தின் தோற்றம் குறித்து ஓரளவு தீர்மானத்திற்கு வர முடியும் என்று கூறப்படுகின்றது.



## கராபோ உடல் என்புகள் கண்டுபிடிப்பு

கராபோவின் உடல் என்புகள் தென்னாபிரிக்காவின் கற்குகையொன்றினுள் இருந்து கண்டெடுக்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டே இந்த என்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. பேராசிரியர் லீ பர்கர் அங்கு அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே, கராபோ இனத்திற்குரிய முதலாவது என்புத் துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை 13 வயது நிரம்பிய கராபோ இன சிறுவனினுடையதாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.



## மனிதக் கை

கராபோவின் கை என்புகளைக் கண்ட விஞ்ஞானிகள் வியப்படைந்தனர். காரணம், அந்த என்புகள் மனிதக் கை என்புகளை போன்றிருந்தமையினால் ஆகும். இதற்கு முன்னர் விஞ்ஞானிகள் இவ்வாறான கை என்புகளைக் கண்டெடுத்திருக்கவில்லை. இதனாலேயே 'மனித பரிணாமத்தின் மறைந்துபோன சந்ததி' என்று கராபோ இனத்தை விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கராபோ இனத்திற்குரிய இந்த என்புகள், ஒரு பெண்ணின் எலும்புகளுக்கு அருகாமையில் இருந்தே கண்டுபிடிக்கப்பட்டன. இந்த பெண் குறித்த சிறுவனின் தாயாக இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் அனுமானிக்கின்றனர். இறக்கும்போது அவளுக்கு 30 வயதாக இருந்திருக்கும் என என்புகளை ஆய்வுசெய்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இவர்கள் இருவரினதும் என்புகள் தற்போது இங்கிலாந்தின் லண்டன் நகர இயற்கை வரலாற்று விஞ்ஞான அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

'கராபோ' என்ற சொ... அர்த்தம் 'மறுமொழி' அல்லது 'பதில்' என்பதாகும். இற்றைக்கு இரண்டு மில்லியன் ஆ... களுக்கு முன்தான் இந்த கராபோ சந்ததியினர் வாழ்ந்திருப்பார்கள் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

(பி)

# இவ்வார கார்ட்டூன் படம்



இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2014, ஒகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday August 13, 2014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org